பக்கங்கள்:- பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

தரமான மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும், சிறந்த முறையில் பற்களைக் கட்டிக்கொள்ளவும், மிதப்புப் பற்களுக்கு கிளிப் போட்டுக் கொள்ளவும் நாட வேண்டிய இடம்

பி.ஜே. பர்ணாண்டோ

இலக்கம் 542, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்

# வலம்புரி

# VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 வைகாசி 03 சனிக்கிழமை (17.05.2003) தொலைபேசி ~ 2223378 ஒலி 149

## மாநாட்டில் கலந்துகொள்வதில்லை

# புலிகள் தமது முடிவை பரிசீலிக்க வேண்டும்

## ஜப்பான் அரசு அவசர வேண்டுகோள்

(நமது நிருபர்)

**ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு மறுப்பு தெரிவித்திருப்பதை விடுதலைப்புலிகள் மறுபரிசீலனை செய்யவேண்டும் என அவர்களிடம் ஜப்பான் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.**

யப்பான் மாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பங்கு கொள்ளச் செய்வதற்கு நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றசன் வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் நடத்திய பேச்சுக்கள் தோல்வியடைந்ததை அடுத்து யப்பான் மேற்கண்ட அவசர வேண்டுகோளை புலிகளிடம் விடுத்துள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)

## பஸ் விபத்தில் சிக்கி தாயும் மகனும் பலி

### 25 பேர் படுகாயம்

(திருகோணமலை)

கொழும்பு-திருகோணமலை வீதியில் கபரணைப் பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் தாயும் மகனும் உயிரிழந்தனர். மேலும் 25 பேர் கடும் காயங்களுக்கு உள்ளான நிலையில் அநுராதபுரம், பொலநறுவை, கந்தளாய் ஆகிய வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

கொழும்பில் இருந்து திருகோணமலைக்கு சுற்றுலா மேற்கொண்டவர்களே இந்த விபத்துச் சம்பவத்தில் சிக்கியதாக தெரிவிக்கப்படுகிறது. நேற்று முற்பகல் 11மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வாகனம் ஒன்றிற்கு வழி விட்டுக் கொடுக்க முயன்றபோது பஸ் மரம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. (த)

## நோர்வே தூதுவர் இன்று தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

இலங்கைக்கான நோர்வே தூதுவர் இன்று காலை கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை டோக்கியோ நிதியுதவி மாநாட்டில் கலந்து கொள்ளச் செய்யும் ராஜதந்திர முயற்சியின் தொடர்ச்சியா

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் மட்டு அலுவலகம் மீது நேற்றுக் கைக்குண்டு வீச்சு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகர்ப்பகுதியில் அமைந்திருந்த விடுதலைப்புலிகளின் அலுவலகம் மீது நேற்று பி.ப 2.30 மணியளவில் கைக்குண்டு வீசப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் ஒருவர் வீசிய இக்குண்டின் வெடிக்க வைக்கும் கருவி மாத்திரமே வெடித்ததால் சேதம் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி சம்பவம் குறித்து உடனடியாகவே மட்டக்களப்பு மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்பு குழு அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து கண்காணிப்புக்

(10ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் பாதுகாப்பை குறைப்பதற்கு அரசு முயற்சி!

### சரத் அமுனுகம குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமருக்கும் வழங்கப்பட்டுவந்த பாதுகாப்பை அரசு குறைக்கவுள்ளதாக பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம குற்றஞ்சாட்டியுள்ளார்.

அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றதை அடுத்து எழுந்துள்ள அரசியல் நெருக்கடி குறித்து செய்தியாளர் மத்தியில் உரையாற்றும்போதே கலாநிதி சரத் அமுனுகம மேற்கண்டவாறு குற்றஞ் சாட்டியுள்ளார்.

இச் செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு வழங்கிவரும் பாதுகாப்பை குறைத்து அவருக்கு அச்சுறுத்தலை கொடுக்கக்கூடிய வகையில் அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமாக இருந்தால் அதனை மக்களின் ஆதரவுடன் முறியடிப்பதற்கு மக்கள் சக்தியை திரட்டவேண்டிவரும் என்றும் சரத் அமுனுகம எச்சரித்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதிக்கும் முன்னாள் வெளிவிவகார அமைச்ச

(10ம் பக்கம் பார்க்க)

## பிரதமர் ரணில் நேற்று இந்தியாவிற்கு திடீர் பயணம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று இந்தியா சென்றுள்ளார்.

தனது துணைவியார் சகிதம் கேரளாவிற்கு சென்றிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை நேற்றுக் காலை கேரள மாநில சுற்றுலாத் துறை அமைச்சர் ரி.வி. தோமஸ் அங்கிருந்து அழைத்துச் சென்றார்.

பிரதமர் தனது இரண்டு நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு நாளை கொழும்பு திரும்புவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றுக் கொண்டதினால் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை அடுத்து பிரதமர் இந்தியா சென்றிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததொன்றென அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (வ)

## ஜனாதிபதி சந்திரிகாவுடன் முட்டி மோத வேண்டாம்

### அமைச்சர்களுக்கு பிரதமர் ஆலோசனை

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவுடன் எந்த விதத்திலும் முட்டி மோதிக் கொள்ள வேண்டாம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அமைச்சர்களை வலியுறுத்திக் கேட்டுள்ளார்.

நேற்றுக் காலை இந்தியாவுக்கு புறப்படு முன்னர் கட்சியின் முக்கியஸ்தர்களையும் அமைச்சர்களையும் பிரதமர் சந்தித்துப் பேசினார். இதன்போது ஜனாதிபதியிடம் இருந்து

(10ம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்ட முஸ்லிம் இளைஞர் சடலமாக மீட்கப்பட்டார்

### மட்டக்களப்பில் சம்பவம்

(மட்டக்களப்பு)

ஓட்டமாவடியில் வைத்து நேற்று முன்தினம் இனந்தெரியாத நபர்கள் சிலரால் கடத்திச்செல்லப்பட்ட இளைஞர் ஒருவர் நேற்றுக் காலை கிண்ணியடியில் சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

நாவலப்பிட்டியைச் சேர்ந்த முகமது கிக்கீம் (வயது-30) என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

பிரஸ்தாப இளைஞர் கொழும்பில் தனியார் நிறுவனம் ஒன்றில வேலை பார்த்து வந்ததாகவும் சம்பவ தினத்தன்று ஓட்டமாவடிக்குச் சென்றவேளையில் இனந்தெரியாத சிலரால் கடத்திச்செல்லப்பட்டதாகவும் வாழைச்

(10ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதிக்கு பிரதமர் கடிதம்

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றுக் கொண்டமை குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு ஜனாதிபதி அனுப்பிவைத்த கடிதத்திற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா சுருக்கமான பதில் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக அவரது செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இக் கடிதப் பரிமாற்றம் தொடர்

(10ம் பக்கம் பார்க்க)



வெசாக் உற்சவத்தை முன்னிட்டு ஜனாதிபதி சந்திரிகா அத்தனகல புராதன இராஜ மகா விகாரையில் வழிபாட்டில் கலந்துகொண்ட காட்சி.

## சிறுவிளம்பரம்

### விற்பனைக்கு

சவாரி செய்யக்கூடியதும், வண்டில் இழுக்கக்கூடியதுமான நாம்பன் மாடு ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.20, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (C/6132)

### திருமண சேவை

298, கோயில் வீதி, நல்லூர் என்னும் முகவரியில் உள்ள கமலக்கண்ணன் திருமண சேவை 21ஆம் திகதியில் இருந்து 25ஆம் திகதி வரை திறக்கப்படமாட்டாது என்பதை அறியத்தருகின்றேன். தொடர்பு: P.கமலக்கண்ணன். (6962)


# ஜனாதிபதியும் பிரதமரும் பேச்சு நடத்தி அரசியல் சர்ச்சைக்கு முடிவு கட்ட வேண்டும்

## அமைச்சரவையின் இறுதித் தீர்மானம் இது

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றதன் பின்னர் எழுந்துள்ள அரசியல் யாப்பு சர்ச்சைக்கு ஜனாதிபதியும் பிரதமரும் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காணவேண்டும் என்பதே அமைச்சரவையின் இறுதித் தீர்மானம் என்று மத்திய பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்கா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்கா மேலும் கூறுகையில்,

தற்போது ஏற்பட்டுள்ள சர்ச்சையை பொதுமக்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் மத்தியில் கொண்டு சென்று பெரிதுபடுத்தி பிளவுகளை ஏற்படுத்துவதை விட புரிந்துணர்வுடன் இருதரப்பும் செயற்பட்டு பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்.

1999ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த மக்கள் ஆணையையும், 2001ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் கிடைத்த மக்கள் ஆணையையும் பிரதிநிதித்துவம் செய்யும் இரண்டு பிரிவுகள் உள்ளன.

மாற்றுக் கருத்துக்கள் ஏற்படும் போது ஜனாதிபதி தனக்குள்ள அரசியல் யாப்பு அதிகாரங்களை பயன்படுத்தாமல் இறுதியாகக் கிடைத்த மக்கள் ஆணையின் மூலம் ஆட்சி நிர்வாகத்தை மேற்கொள்ளும் அரசுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்றார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

சட்டமா அதிபரின் விளக்கங்களை ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் கடுமையாக விமர்சித்துள்ளமை மிகவும் மோசமான செயல். அரசாங்கத்துக்கும் ஜனாதிபதிக்கும் ஆலோசனைகளை சட்டமா அதிபரே வழங்கி வருகின்றார்.

இந்நிலையில், இவ்வாறு விமர்சிக்கப்படுவது மக்கள் மத்தியில் தப்பான அபிப்பிராயம் ஏற்பட வழி வகுக்கும் என்றார்.

சட்ட ஏற்பாடுகளுக்கு பல்வேறு தரப்பினரும் விளக்கம் கொடுக்க முற்பட்டால் மேலும் பல நெருக்கடிகள் ஏற்படக்கூடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (உ-3)

# ஜனாதிபதி மிக அவதானமாக நடக்கவேண்டிய தருணம் இது

## தென்மாகாண மகாநாயக்கர் எச்சரிக்கை

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றதையடுத்து எழுந்துள்ள அரசியல் சர்ச்சை நாட்டின் பொருளாதாரத்துக்கும், சமாதான நடவடிக்கைகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று தென்மாகாண மகாநாயக்கர் வணக்கத்திற்குரிய கெட்டமானிய தம்பிக்கித்திய தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுபற்றி மேலும் கருத்து வெளியிட்ட தேரர்,

தற்போதைய சர்ச்சை தொடர்பாக மிகவும் அவதானமாகச் செயற்பட்டு தீர்வுகளைக் காணவேண்டும்.

சமாதான முயற்சிகளில் தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் இணைந்து செயற்பட முன்வந்துள்ள நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள சர்ச்சை தமிழ் மக்கள் மத்தியில் சந்தேகக் கறையை ஏற்படுத்தக் கூடும்.

இதேவேளை, அரசாங்கத்துக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நிலவும் இழுபறி நிலை நீடித்தால் ஜப்பானில் நடைபெற இருக்கின்ற உதவி வழங்கும் மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ள நாடுகள் இலங்கைக்கு உதவிகளை வழங்கத் தயக்கம் காட்டலாம்.

இதனால் ஜனாதிபதி மிக அவதானமாக இந்த நடவடிக்கைகளை கையாள வேண்டும் என்றும் அவர் ஆலோசனை தெரிவித்துள்ளார். (உ-3)

# தேசிய விளையாட்டு பயிற்சி நிலையங்கள் மறுசீரமைப்பு

(கொழும்பு)

தேசிய விளையாட்டுத் துறைப் பயிற்சி நிலையங்களை மறுசீரமைக்க விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ தீர்மானித்துள்ளார்.

மாவட்ட மட்டத்தில் உள்ள பயிற்சி நிலையங்களை மறுசீரமைப்பு செய்வதன்மூலம் விளையாட்டுத்துறையில் இலைமறைகாயாக உள்ளவர்களை தேசிய மட்டத்துக்கு கொண்டுவரமுடியும் என அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்நிலையங்களில் பயிற்சி பெறும் வீரர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்படுவதுடன், பயிற்றுவிப்பாளர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகளும் வழங்கப்படவுள்ளன. (தி)

# சைவ அபிவிருத்திக்கழக போட்டி முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

2வது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் நடாத்திய சைவ சமய பொது அறிவுப் போட்டியில் அதிக புள்ளிகளைப் பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் அதிக புள்ளிகளைப் பெற்று பரிசுபெறத் தகுதி பெற்றோரின் விபரம் வருமாறு,

த.சுதர்சினி (யாழ்ப்பாணம்), ஜீ.கஜீவா (அளவெட்டி), ச.சக்திபாலன் (உடுவில்), ச.சக்திதாயினி (உடுவில்), கே.யோகீதன் (யாழ்ப்பாணம்), த.ராஜரமணன் (யாழ்ப்பாணம்), சி.அபிராமி (யாழ்ப்பாணம்), இ.ராஜகுமார் (ஈச்சமோட்டை), சா.விதுஷன் (யாழ்ப்பாணம்), நா.ஜனார்த்தனன் (யாழ்ப்பாணம்). (ந-5)

# கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில்; பாரிய எண்ணெய்க் களஞ்சியம்

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் பாரிய எண்ணெய் களஞ்சியத் தொகுதி ஒன்று அமைக்கப்படவுள்ளது.

சர்வதேச எண்ணெய்ச் சந்தையில் இலங்கையையும் இணைத்துக் கொள்ளும் நோக்கத்துடன் இக்களஞ்சியத் தொகுதி அமைக்கப்படவுள்ளது.

நவீன கணனித் தொழில்நுட்ப வசதிகளுடன் அமைக்கப்படவுள்ள இத் திட்டத்திற்கு 90 கோடி ரூபா செலவிடப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் உள்ள எண்ணெய்ப் பிரிவில் 3 தாங்கிகளும் அமைக்கப்படவுள்ளன.

இவ்விமான நிலையத்தில் தற்போது 3 நாட்களுக்குத் தேவையான எண்ணெய் மாத்திரம் களஞ்சியப்படுத்தப்படுகிறது. ஆனால் இத்திட்டம் மூலம் 9 நாட்களுக்கு தேவையான எண்ணெய் களஞ்சியப்படுத்த முடியுமென தெரிவிக்கப்படுகின்றது. (தி)

# சூழல் மாசடைதலைத் தடுக்க ஊடகங்கள் ஊடாகப் பிரசாரம்

## துறைசார்ந்தோர் கூடித் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

உலக சூழல் தினத்தை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை பல்கலைக்கழக ஆளுநர்சபை மண்டபத்தில் ஒன்றுகூடிய துறைசார்ந்த விரிவுரையாளர்கள், அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் பொருண்மிய மதியுரையக இயக்குநர் மா.செவ்வேள், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ். மாவட்டப் பொறுப்பாளர் தி.ஞானவேல் ஆகியோர் இன்றைய காலகட்டத்தில் யாழ். குடாநாட்டின் சூழல் பாதுகாப்புத் தொடர்பான கருத்துரைகளையும் ஆலோசனைகளையும் வழங்கினார்.

சூழல் பாதுகாப்பானது பாரிய சமூக பொருளாதாரப் பிரச்சினையாகக் காணப்படுகின்றது. சூழல் மாசடைதல் தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றது. இவற்றைத் தடுப்பதற்கு நாம் தனிப்பட்ட சமூக, திணைக்கள, பல்கலைக்கழக, பாடசாலை மட்டங்களில் திட்டங்களைத் தீட்டி தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என கலந்துரையாடலில் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டது.

உலக நாடுகள் சூழல் பாதுகாப்பிற்காக பல மில்லியன் ரூபாவை அரச, தனியார் நிறுவனங்கள் மூலம் செலவு செய்து சூழல் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் இக்கால கட்டத்தில், நமது நாடும் நாமும் இவ்விடயத்தில் அக்கறை குன்றியவர்களாகவே காணப்படுகின்றோம். இந்நிலை மாற்றப்பட வேண்டும். இதற்காக நாம் பல்வேறு திட்டங்கள் மூலம் சூழல் பாதுகாப்பை மேற்கொள்ள வேண்டும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. இதனையடுத்து பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

* ஜூன் 1-14ஆம் திகதி வரையான இரு வாரங்களும் உலக சுற்றாடல் தினவாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டதுடன், இக்காலப்பகுதி கொடி வாரமாகவும் அனுஷ்டிக்கப்படும்.
* சூழல் நலன் பேணும் நிறுவனத்தை அங்குரார்ப்பணம் செய்தலும்; இந் நிறுவனத்தின் ஊடாக பத்திரிகைகள் தொலைத்தொடர்பு ஊடகங்கள் வாயிலாக சூழல் பாதுகாப்புப் பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தல்.
* சூழல் பாதுகாப்பு தொடர்பாக அனைத்து நிறுவனங்களையும் ஒன்றிணைத்து கருத்தரங்குகள், பதாதைகள், துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.
* சூழல் பாதுகாப்பு பற்றிய ஆய்வரங்கு நடாத்துதல்
* பயன்தரும் மர நடுகைத் திட்டம்
* பொது இடங்களில் சிரமதானப் பணிகள் என்பன மேற்கொள்ளல்.

அத்தோடு, எமது சூழல் பாதுகாப்பினை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் நீண்டகாலத் திட்டங்களைத் தீட்டி அவற்றைச் செயற்படுத்தத் தேவையான நிதி மூலங்களைக் கண்டறிந்து அத்திட்டங்களை நிறைவேற்றுதல் போன்ற பல தீர்மானங்கள் குறித்தும் ஆராயப்பட்டது. (உ)

# கூட்டமைப்பு–பிரதமர் சந்திப்பு அடுத்தவாரம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் அடுத்தவாரம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளனர்.

ஜப்பானில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் மாநாடு பற்றியும் அந்த மாநாட்டில் கலந்து கொள்வது பற்றிய விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு பற்றியும் இந்தப் பேச்சுவார்த்தையில் ஆராயப்படவுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை கடந்த வாரம் கூட்டமைப்பினர் சந்தித்துப் பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்ட குழு எதிர்வரும் 20ஆம் திகதி வெளிநாட்டு இராஜதந்திரிகளைக் கொழும்பில் சந்தித்து தற்போதைய நிலை தொடர்பில் கலந்துரையாடவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

# வெசாக் தினத்தை ஒட்டி 1513 பேருக்கு விடுதலை

(கொழும்பு)

சிறு குற்றங்களுக்காக தண்டனை அனுபவித்து வந்த ஆயித்து 513 சிறைக் கைதிகள் நேற்று முன்தினம் நாடு முழுவதிலும் உள்ள சிறைச் சாலைகளில் இருந்து விடுதலை செய்யப்பட்டதாக சிறைச்சாலை ஆணையாளர் உபாலி தர்மபாலா தெரிவித்துள்ளார்.

வெசாக் தினத்தை முன்னிட்டு சிறைச்சாலை ஆணையாளர் உட்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்காவுக்கு வழங்கிய சிபார்சுக்கு அமைய ஜனாதிபதி இக்கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கியுள்ளார்.

பல்வேறு விதமான சிறு குற்றங்களுக்காக தண்டனை பெற்று சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டவர்களும், அபராதம் விதிக்கப்பட்டு அதனை செலுத்த முடியாத நிலையில் இருந்தவர்களுமே தற்போது விடுதலை செய்யப்பட்டனர்.

இதற்கமைய வெலிக்கட சிறையில் இருந்து 421 பேரும், போகம்பறை சிறையில் இருந்து 165 பேரும், மகாச்சிறையில் இருந்து 143பேரும், அனுராதபுரம் சிறையில் இருந்து 176 பேர் உள்ளடங்கலாக ஆயிரத்து 513 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (தி)


## தரம் 09 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

பரிசுகள் ரூபா 750/= 500/= 250/=
மற்றும் சான்றிதழ்களும்

விடயம் : ''தாய் அன்பிற்கு நிகரேது''

சொற்கள்: 175-200 வரை

கட்டுரைகள் 25.05.2003 ற்கு முன்னதாக ''மாணவர் கட்டுரைப் போட்டி'' வலம்புரி, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

### இணைக்கும் பத்திரம்

### கட்டுரைப் போட்டி இல-3

மாணவர் முழுப் பெயர் :------------------------------------
பாடசாலை :------------------------------------
:------------------------------------
கற்கும் தரம் :----------------

உறுதிப்படுத்துகிறேன்

--------------------------
ஆசிரியர்

### வீழ்ச்சியடைந்த கல்வி நிலையை மீட்டெடுக்க

# தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை காத்திரமான பங்களிப்பை வழங்க வேண்டும்

## வட – கிழக்கு மாகாண சபையின் கல்வி கலாசார பணிப்பாளர் செ. மகாலிங்கம் வேண்டுகோள்

(தென்மராட்சி)

உயர்ந்த நிலையிலிருந்த எமது கல்வி பலவிதமான பிரச்சினைகள் காரணமாக சில பின்னடைவுகளை எதிர்கொள்வதால் கீழ்நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளது. எனினும் இது தற்காலிகமானதே. இந்த நிலையை நாம் மாற்றிக் காட்ட வேண்டும்.

இவ்வாறு, வடக்கு-கிழக்கு மாகாணசபையின் கல்வி, கலாசார விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் செ.மகாலிங்கம் நல்லூரில் . அமைந்துள்ள யாழ். கல்விவலய மண்டபத்தில் நடைபெற்ற தமிழீழகல்வி மேம்பாட்டுப் பேரவையின் யாழ்.மாவட்டக் கிளையின் பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

பேரவையின் யாழ். மாவட்டத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கல்விப் பணிப்பாளர் தொடர்ந்தும் உரையாற்றும்போது,

எமது சமுதாயத்தைப் பொறுத்த வரையில் கல்வி ஒரு அரும் பெரும் சொத்தாக எப்போதுமே மதிக்கப்பட்டுவந்தது. ஆனால். சமீபகாலத்தில் பலவிதமான பிரச்சினைகள் காரணமாக சில பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன. அத்தகைய பின்னடைவுகளை நாம் விபரமிட்டு எங்களுடைய நிலையிலிருந்து உயர்ந்த நிலையை அடைய வேண்டும்.

கலவிப்பேரவையின் நோக்கங்கள், செயல்பாடுகள் எங்களுடைய சமுதாயத்தினுடைய கல்வித தரத்தை உயர்த்த உதவவேண்டும். மேலும் ஒருபுதிய உச்சத்தை . அடைய கல்விப் பேரவையின் செயற்பாடுகள் வழி வகுக்க வேண்டும்.

இதுவிடயத்தில் காத்திரமான பங்களிப்பு வேண்டும் என எதிர்பார்க்கிறேன் எனக்குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா உரைநிகழ்த்தும்போது,

கடந்த இரண்டு தசாப்தங்களாக இம்மண்ணில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக எமது கல்வி புறக்கணிக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசத்து மக்களுடைய கல்வி எவ்வளவு தூரம் புறக்கணிக்கப் பட்டுபெரும் பின்னடைவை எதிர் கொண்டுள்ளது என்பதை யாவரும் அறிவர். தமிழ்த்தேசத்து மக்களுடைய கல்வி உலகத்துடன் ஒட்டி மேம்படுத்தப்படவேண்டும்.

இன்றைய நவீன தொழில் நுடபவியல் துறையில் எமது மாணவர்கள் பலவருடங்கள் பின் நோக்கியே உள்ளனர். ஆனால், கனடா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் வாழ்கின்ற தமிழ் மாணவர்கள் ஏனைய மேலைத்தேய மாணவர்கள் முன்னேறி வருகின்றனர்.

இதேபோல இங்குள்ள மாணவர்களுக்கும் நவீன தொழில் நுட்பவியல் சார்ந்த அறிவுரைகளை வழங்க வேண்டும். அதற்கான முயற்சிகளை நான் அண்மையில் இந்தியாவில் மேற்கொண்டுள்ளேன். அங்கிருந்து வள அறிஞர்களை இங்கு வரவழைத்து எமது மாணவர்களுக்கு கணனிசார் அறிவை வழங்கவுள்ளோம். இப்பணியில் கல்விமேம்பாட்டுப்பேரவையின் உயரிய பங்களிப்பு அவசியமாக இருக்கும் என்றார்.

(உ-77,7,43,4)

# முஸ்லிம்கள் யாழில் மீளக்குடியமரும் சூழலை ஏற்படுத்தியவர் தலைவர் பிரபா

## மீலாத் விழாவில் இளம்பரிதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ், முஸ்லிம் மக்களின் எதிர்காலத்தைப் பற்றியே சதா காலமும் சிந்தித்துக்கொண்டு அவர்



தம சுதந்திர வாழ்வு ஒன்றிலேயே சொல்லிலும் செயலிலும் உறுதியாக இருப்பவர் எங்களுடைய தலைவர் ஒருவர்தான்.

யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி நேற்றுமுன்தினம் யாழ். ஐந்து சந்தியில் இடம்பெற்ற மீலாத் விழாவில் கலந்துகொண்டு பேசுகையிலேயே இவ்வாறு குறிப பிட்டார்.

யாழ். பேஷ் இம்மாம் புறுப் பள்ளிவாசலில் மௌலவி, ஏ.ஜி.எம. இர்பான் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் தொடர்ந்தும் உரை நிகழ்த்திய இளம்பரிதி,

தமிழ், முஸ்லிம் மக்களினுடைய உரிமைப் போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கின்றவேளை இது.

இப்போதுதான் நாம் மிக அவதானமாகச் செயற்பட வேண்டும். எம் இரு இனங்களுக்கும் இடையில் வேறுபாடுகளையும் குரோத மனப்பாங்குகளையும் வளர்த்து எம்மைப் பிளவுபடுத்தத் தருணம் பார்த்திருக்கிறார்கள் தென்னிலங்கை இனவாதிகள்.

இவர்களது நடவடிக்கைகளுக்கு நாம் இணைந்து கொடுப்போமானால் இவ்வளவு காலமும் பட்ட துன்ப துயரங்களுக்கு முடிவவே கிட்டாது இதுதான் யதார்த்தம் - இதைப் புரிந்து நடந்தால் எம்மை அசைக்க எவராலும் இயலாது.

1990 இல் முஸ்லிம்கள் யாழ்ப் பாணத்தில் இருந்து வெளியேறியது என்பது கவலை தரும் விடயம்தான்.

அந்த வெளியேறலின் தார்ப் பரியத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இதுவிடயத்தைப் பெரிதுபடுத்தி எரியும் நெருப்புக்கு எண்ணெய் வார்க்கும் நயவஞ்சக நடவடிக்கைகளுக்கு நாம் துணைபோகலாகாது.

வெளியேறிய முஸ்லிம்கள் 12 வருடங்களின் பின்னர் யாழ்ப் பாணம் வந்திருக்கிறார்கள். இவ்வாறானதொரு சூழ்நிலையை ஏற் படுத்தியது எங்களுடைய தலைவர் பிரபாகரன்தான்.

தலைவரின் அழைப்பை ஏற்றே இங்கு மீண்டும் வந்திருக்கிறார்கள் எங்களுடைய முஸ்லிம் சகோதரர்கள்.

முஸ்லிம்களின் ஊரிமைக்காகக் குரல் கொடுப்பதாகக் கூறிக் கொள்ளும் எவராவது அந்த மக்கள் மீளக்குடியமரக்கூடிய அடித் தளத்தை இட்டார்களா? அதைப் பற்றித்தான் சிந்தித்தார்களா?

இவ்வாறான வாய்ச்சவடால் காரர்களை எல்லாம் எங்களுடைய முஸ்லிம் மக்கள் நம்பவில்லை என்பதை அவர்கள் வெளிப்படுத் தியிருக்கிறார்கள்.

எமது தலைவன் ஒருவனின் வார்த்தைக்கு மதிப்பளித்து இங்கு மீண்டும் வந்திருக்கிறார்கள்.

முஸ்லிம்கள் இங்கிருந்து வெளியேறினாலும் அவர்களது வணக்கஸ்தலங்களுக்குரிய மதிப் பளித்து பேணப்பட்டு வந்தது. நிர்ப பந்தம் காரணமாக வெளியேறிய இவர்கள் என்றோ ஒருநாள் மீண் டும் வருவார்கள் என்ற நம்பிக்கையின் வெளிப்பாடே இது என்றார்

இந்நிகழ்வில், இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

(உ-5)

# அபிவிருத்தி லொத்தர் சபை அதிகாரிகளுடன் அவசர சந்திப்புக்கு ஜனாதிபதி ஏற்பாடு

## சட்டமா அதிபரின் பதில் உதாசீனம்

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபை அதிகாரிகளை விரைவில் அவசர கூட்டம் ஒன்றிற்கு ஜனாதிபதி அழைக்கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

லொத்தர் சபையின் தலைவர் மற்றும் அதிகாரிகள் தன்னுடன் இணைந்து பணியாற்ற சம்மதம் தெரிவிப்பார்கள் எனில் சபையில் தான் எந்த மாற்றங்களையும் செய்ய மாட்டேன் என்னும் விடயத்தை ஜனாதிபதி அவர்களுடன் கலந்தாலோசிப்பதே இக் கூட்டத்தின் நோக்கம் என்று கூறப்படுகிறது.

அபிவிருத்தி லொத்தர் சபையை பொறுப்பேற்பது தொடர்பாக எந்த ஒரு சமரசத்திற்கும் இடம் இல்லை என ஜனாதிபதி பிரதமருக்கு தெரிவித்த பின்னரே இக் கூட்டம் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

தன்னை கலந்தாலோசிக்காமல் அரசியல் யாப்பில் மாற்றத்தை ஏற்படுத்தியதாக கடந்த வெள்ளியன்று பிரதமர் அதிருப்தியை வெளியிட்டிருந்தார். ஆனால், தேவையேற்பட்டால் மட்டுமே கலந்தாலோசனை செயவதாக ஜனாதிபதி பதிலளித்துள்ளார்.

அரசியல் யாப்புப் பற்றிய இழுபறி நிலை தொடர்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் மக்கள் தொடர் பாடல் அமைச்சர் இது தொடர்பாக சட்டமா அதிபரை நாடியுள்ள போதும் ஜனாதிபதி இது தொடர்பாக பிரதமருடன் கலந்தாலோசித்திருக்க வேண்டும் என்று சட்டமா அதிபர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

சட்டமா அதிபரின் பதில் என்னவாக இருப்பினும் ஜனாதிபதி தனது முடிவை மாற்றப் போவதில்லை என்றும் இதற்குத் தீர்வு காண அரசாங்கம் விரும்பினால் மேல் நீதி மன்றில் ஆலோசனை கேட்கலாம் என்றும் ஜனாதிபதியின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(உ)

# பேச்சுவார்த்தையைத் தொடர்வதில் விடார் விடா முயற்சி

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப். பேச்சுக்



களில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை தீர்க்கும் முயற்சிகளில் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீஸன் மீண்டும் ஈடுபடுவார் என நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடனான சந்திப்பை முடித்துக்கொண்டு, நாளை நாடு திரும்ப இருந்த நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் இச் சந்திப்பில் எந்தவொரு முடிவும் எட்டப்படாததைத் தொடர்ந்து இன்னும் ஓரிரு நாட்கள் இலங்கையில் தங்கியிருந்து தொடர்ந்தும் இம்முயற்சிகளில் ஈடுபடுவார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் பேச்சுவார்த்தைகளில் முன் வைக்கப்பட்ட விடயங்களுக்குத தீர்வு காணப்படும்வரை பேச்சுக்களைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதாகவும் டோக்கியோ மாநாட்டை பகிஷ்கரிக்கப் போவதாகவும் அறிவித்ததைத் தொடர்ந்து, அவர்களை இவற்றில் பங்குகொள்ள வைக்க நோர்வே பெரும் முயற்சிகளைச் செய்துவருவது குறிப்பிடத் தக்கது.

(கி)

### அபி. லொத்தர்சபை இழுபறியை

# அனைத்துக்கட்சிகளும் இணைந்து தீர்த்து வைக்க வேண்டும்

## கூட்டு வர்த்தக மன்றம் வேண்டுகோள்

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபை இழுபறிக்கு தீர்வுகாண்பதில் சகல அரசியல் கட்சிகளும் ஆக்கபூர்வமாக ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என கூட்டு வர்த்தக மன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக வர்த்தக மன்றம் விடுத்துள்ள அறிக்கையில்,

முக்கிய பொறுப்புக்கள் சில ஜனாதிபதியிடமும், பிரதம மந்திரியிடமும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

நாட்டின் நன்மை கருதி ஆக்க பூர்வமான அடிப்படையில் இப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட வேண்டும்.

அபிவிருத்தி லொத்தர் சபை பிரச்சினை அநாவசியமானது. இதன் காரணமாக பல முக்கிய பிரச்சினைகள் திசை திருப்பப் படுகின்றன என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(கி)

### தேசிய இளைஞர் கொடிதினம்

(கொழும்பு)

தேசிய இளைஞர் கொடிவாரத் தினம் இம்மாதம் 23ஆம் திகதியில் இருந்து 29ஆம் திகதிவரை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இவ்வாரத்தில் இளைஞர் விளையாட்டு விழா, இளைஞர்களுக்கான மொழிப்பயிற்சி வகுப்புகள், இளைஞர்முகாம்கள், இளைஞர் பரிமாற்றத்திட்டங்கள் என்பன நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

(தி)

# ஈராக் புனரமைப்பு திருத்தப் பிரேரணை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் சமர்ப்பிப்பு

(வாஷிங்டன்)
ஈராக்கில் புனர்நிர்மானப் பணிகள் மேற்கொள்வது தொடர்பான திருத்தப்பட்ட பிரேரணை ஒன்றை அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் நேற்று முன்தினம் சமர்ப்பித்துள்ளது.

இந்த திருத்தப் பிரேரணையை வரவேற்றுள்ள ரஷ்ய பிரதிநிதி ஈராக் விடயத்தில் அமெரிக்காவினால் சரியான பாதையில் முன்னெடுத்துச் செல்லப்பட்டுள்ள முதலாவது நடவடிக்கை இதுவாகும் என்று கூறியுள்ளார்.

அத்துடன், இப்பிரேரணை தொடர்பாக அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஈராக்கின் எண்ணெய் ஏற்றுமதி மூலம் பெற்றுக் கொள்ளப்படும் நிதியை ஈராக்கின் புனர்நிர்மானப் பணிகளுக்கு எவ்வாறு செலவிடுவது என்பது தொடர்பாக அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் தலைமையிலான குழுக்கள் கூடி மிக விரைவில் தீர்மானிக்கவுள்ளதாக இருதரப்பு உயர் அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், ஈராக் மீது ஐக்கிய நாடுகள் சபையினால் விதிக்கப்பட்டுள்ள தடைகளை நீக்குவது தொடர்பாக தங்களால் முன்வைக்கப்பட்டுள்ள மற்றுமொரு பிரேரணை மீது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற புதிய யோசனை ஒன்றையும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா முன்வைத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் இராஜதந்திரிகள் இதுகுறித்து கருத்து வெளியிடுகையில்,

அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானம் மீது வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு முன்னர் போருக்குப் பின்னான ஈராக்கில், ஐக்கிய நாடுகளின் பங்களிப்புகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பிலும், ஈராக்கின் எண்ணெய்க்கான உணவுத் திட்டம் எவ்வாறு செயற்படுத்தப்பட வேண்டும் என்பது பற்றியும் எடுக்கப்படவேண்டிய தீர்மானங்களுக்கு முக்கியத்துவம் அளித்து அதுபற்றி ஆராய்வது குறித்தும் கருத்துக் கூறியுள்ளார்.

மேலும், ஐக்கிய நாடுகளினால் முன்வைக்கப்பட்டுள்ள பொருளாதார தடைகள் நீக்கம் தொடர்பான ஆலோசனைகளுக்கு அமெரிக்கா ஆதரவு வழங்கினால் பாதுகாப்பு சபையின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு அமெரிக்காவுக்கு கிடைக்கும்.

இந்த விடயத்தில் பாதுகாப்பு சபையின் அங்கீகாரம் கிடைத்தால் ஈராக்கில் இருந்து எண்ணெயினை ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு அமெரிக்கக் கூட்டணிக்கு கிடைக்கலாம் என்றும் மேற்குலக இராஜதந்திரிகள் கூறியுள்ளனர். (உ-2)

## ஹொங்கோ தீவிரவாதிகளுடன் ஜனாதிபதி கபிலா சமாதானப்பேச்சு

(ப்ரஜாவில்)
ஹொங்கோ ஜனாதிபதி ஜோசப் கபிலா அந்நாட்டின் தீவிரவாதக் குழுக்களின் தலைவர்களின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ஹொங்கோவில் கடந்த ஒரு மாத காலமாக அந்நாட்டுப் படையினருக்கும தீவிரவாதக் குழுக்களுக்குமிடையே நடைபெற்றுவந்த கடும் மோதல் காரணமாக நூற்றுக் கணக்கான பொதுமக்கள் உயிரிழந்துள்ளதுடன் ஆயிரக்கணக்கானோர் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறியுள்ளனர். இதனை முடிவுக்கு கொண்டுவரும் நோக்கிலேயே அந்நாட்டு ஜனாதிபதி கபிலாவும், போராட்டங்களை நடத்து வரும் தீவிரவாதக் குழுக்களின் தலைவர்களின் பிரதிநிதிகளும் பேச்சுவார்த்தையினை நடத்தியுள்ளனர்.

இப்பேச்சுவார்த்தைகள், மோதல்கள் இடம்பெறும் பு.்.ர்னியா பகுதியில் அமைதியை ஏற்படுத்தவும் ஹொங்கோவில் சமாதானத்தை நிலைநாட்டும் வகையிலும் நடத்தப்பட்டதாக ஜனாதிபதி கபிலாவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு சரியான முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-2)

## மனிதாபிமானத்திற்கு அச்சுறுத்தல்

(மன்றோவியா)
லைபீரியாவில் தொடர்ந்து வரும் உள்நாட்டுப் போரினால் மனிதத்துவத்திற்கும், மனிதாபிமான செயற்பாடுகளுக்கும் பாரிய அச்சுறுத்தல்கள் ஏற்படக்கூடிய அபாயம் இருப்பதாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

போரினால் சிதைந்து போயுள்ள லைபீரியாவில் பாதிப்படைந்துள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு உதவி செய்து வரும் நிவாரணப் பணியாளர்களின் செயற்பாடுகள் தொடரும் போரினால் தடைப்படுவதாகவும் உயர் ஸ்தானிகராலய தலைவர் ரூப்லூபஸ் கூறியுள்ளார்.

லைபீரிய அரச அதிகாரிகள், நிவாரணப் பணியாளர்கள், இராஜதந்திரிகள் ஆகியோரைச் சந்தித்த பின்னரே ரூப்லூபஸ் இவ்வாறு கூறியுள்ளார். (உ-2)



தாய்லாந்து தலைநகர் தைபேயில், சார்ஸ் நோய்க் கிருமி பரவியிருந்த ஹோபிங் மருத்துவமனை முழுவதையும் தீயணைப்புக் கருவிகள் மூலம் கிருமிநாசினி விசிறி சுத்தம் செய்கின்றனர். மருத்துவமனையிலேயே சார்ஸ் கிருமி பரவிவிட்டதால், அது தனிமைப்படுத்தப்பட்டு இருந்தது. சார்ஸ் நோய்க்குச் சிகிச்சை அளிக்கும் சிறப்பு மருத்துவமனையாக அதை மாற்ற அரசு முடிவு செய்துள்ளது.

## ஐ.நா.சபை மீதும் அமெரிக்கா பாய்ச்சல்

(வாஷிங்டன்)
பேரழிவு மிக்க ஆயுதங்களை ஈரான் வைத்திருப்பதாக குற்றஞ் சாட்டி வரும் அமெரிக்கா ஐக்கிய நாடுகள் சபை மீதும் இது விடயத்தில் குற்றம் சாட்டியுள்ளது.

ஈரான் விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஆயுதக் கண்காணிப்பாளர்கள் மௌனமாக இருக்கின்றனர்.

நாங்கள் பல தடவைகளில் ஈரானின் பேரழிவு ஆயுதங்கள் குறித்து சுட்டிக்காட்டிய போதும் ஐக்கிய நாடுகள் அமைப்பு கவனம் செலுத்தாமல் இருந்து வருகின்றது என்று அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

எனினும், அடுத்த மாதம் நடைபெறவுள்ள அணுசக்தி மாநாட்டில் இது குறித்து அதிக அக்கறை செலுத்தவுள்ளதாக அமெரிக்கா கூறியுள்ளது. (உ-2)

## சார்ஸ் தாக்கத்திற்குள்ளான நாடுகளின் மாநாடு சீனாவில்

(பீக்கிங்)
சார்ஸ் நோய்த் தாக்கத்திற்குள்ளான அனைத்து ஆசிய நாடுகளுக்குமான மாநாட்டை எதிர்வரும ஜூன் மாதம் 3,4ஆம் திகதிகளில் நடத்துவதற்கு சீன சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இந்த இரண்டு நாள் மாநாட்டில் சார்ஸ் நோய் ஒழிப்புக் குறித்த நடவடிக்கைகள் பற்றி கலந்தாலோசிக்கப்படவுள்ளது.

பத்து ஆசிய நாடுகளின் தலைவர்களுடன் ஜப்பான் மற்றும் தென்கொரியாவும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளன.

சார்ஸ் நோயினால் சீனாவில் இதுவரை 260 பேர் பலியாகியுள்ளதுடன் 7ஆயிரத்துக்கும் மேலானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-9)

## ஈராக்புனரமைப்பில் ஐ.நா.வுக்குமுன்னுரிமை பாப்பரசர் வலியுறுத்து

(வத்திக்கான்)
போரினால் பாதிக்கப்பட்ட நாடுகளை புனரமைக்கும் நடவடிக்கைகளில் ஐ.நா.சபை முதன்மை பெற வேண்டும் என பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் தெரிவித்துள்ளார்.

புதிய தூதுவர்களின் நியமனத்தை முன்னிட்டு வத்திக்கானில் நடைபெற்ற தொடர் கலந்துரையாடல்களில் உரையாற்றியபோதே பாப்பரசர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டுள்ளார்.

ஈராக் மீது அமெரிக்கா தொடுத்த போருக்கு கடுமையான கண்டனம் தெரிவித்த பாப்பரசர் ஈராக்கைக் கட்டியெழுப்பும் முயற்சிகளில் சர்வதேச சமூகத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தை தெளிவுபடக் கூறியுள்ளார்.

தற்போது இரு நாடுகளுக்கும் இடையில் உள்ள பிரச்சினைகளை பயங்கரவாதிகளை அழிப்பதன்மூலம் தீர்க்க முடியாது எனவும் பரிசுத்த பாப்பரசர் அங்கு சுட்டிக்காட்டியுள்ளார். (உ-9)

## சந்தேக நபர்கள் கைது

(இஸ்லாமபாத்)
ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா அமைப்புடன் தொடர்பு வைத்திருந்ததாகச் சந்தேகிக்கப்பட்ட 2 பாகிஸ்தானியர்களையும், வேறு ஒருவரையும் பாகிஸ்தான்கைது செய்துள்ளது.

அல்கெய்டா உறுப்பினர் மற்றும் அதன் பாகிஸ்தானிய ஆதரவாளர்களையும் ஒழிக்கும் நடவடிக்கையை பாகிஸ்தான் அண்மையில் தீவிரப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

## கதிரியக்க வெடிகுண்டை கண்டுபிடிக்கும் சோதனை கருவிகள் பொருத்துகை

(லண்டன்)
பிரித்தானியாவின் விமான நிலையங்களிலும், கடற்கரை நகரங்களிலும் கதிரியக்க வெடிகுண்டுகளை கண்டுபிடிக்கும் சோதனைக் கருவிகளை அந்நாட்டின் படைத்துறையினர் பொருத்தியுள்ளனர்.

ஈராக்கில் அணுகுண்டு தயாரிக்கப்படும் இரசாயனத் தொழிற்சாலை கொள்ளையிடப்பட்டு அங்கிருந்து கதிரியக்க வெடிபொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இவற்றைக் கொண்டு தீவிரவாதிகள் வெடிகுண்டுகளைத் தயாரித்து தாக்குதல்களை நடத்தலாம் என்ற அச்சம் காரணமாகவே இந்நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதாக பிரித்தானியப் படைத்துறையினர் கூறியுள்ளனர்.(உ-2)

## தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் கென்ய விமானசேவையை பிரிட்டன் ரத்துச் செய்தது

(லண்டன்)
தீவிரவாதிகளின் தாக்குதல் அச்சுறுத்தலை அடுத்து கென்யாவுக்கான விமான சேவைகளை உடனடி அமுலுக்கு வரும் வகையில் பிரிட்டன் இரத்துச் செய்துள்ளது.

அத்தோடு, கென்யாவில் இருந்து பிரிட்டன் நோக்கி வரும் விமானங்களையும் அனுமதிக்கப் போவதில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அல்கெய்டா அமைப்பைச் சேர்ந்த ஒருவர் சோமாலியாவில் கைது செய்யப்பட்ட பின்னர் கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையிலேயே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிரிட்டனில் இருந்து வருடாந்தம் சுமார் ஒரு லட்சம் பிரித்தானியர்கள் கென்யாவிற்கு சுற்றுப் பயணம் மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.


பிரித்தானியாவின் இந்தத் திடீர் அறிவிப்பு தங்களது வர்த்தகத்திற்கு கடும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருப்பதாக கென்யா அறிவித்துள்ளது. (உ-9)

## தாய்வானின் தனித்துவம் குறித்து சீனா கடும் சீற்றம்; கண்டனம்

(பீக்கிங்)
ஜெனிவாவில் அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள உலக சுகாதார ஸ்தாபன மாநாட்டிற்கு தாய்வான் அழைக்கப்பட்டுள்ளமை குறித்து சீனா தனது கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

தாய்வானை தனியான நாடாக இந்த மாநாட்டில் கலந்து கொள்ள அனுமதிக்க வேண்டும் என்ற அமெரிக்க காங்கிரசின் பிரேரணை நிறைவேற்றப்பட்டதை அடுத்து சீனா இக்கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

சீனாவின் மாகாணங்களில் ஒன்றாகவே தாய்வான் இருக்கிறது. எனவே, இந்த மாநாட்டிற்கு நாடாக அங்கீகரிக்கப்படாத தாய்வானை அழைப்பது கண்டிக்கத்தக்கது என்று சீனா மேலும் கூறியுள்ளது. (உ-2)



ரோம் நகரில் திபர்டினா ரயில் நிலையம் அருகே இரண்டு ரயில்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. விபத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் மீட்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்



பஞ்சாப் மாநிலம் லூதினா அருகே தீப்பிடித்து எரிந்த கோல்டன் டெம்பிள் விரைவு ரயில் பெட்டியில் சிக்கி உயிரிழந்தோரை தீயணைப்புப் படையினர் மீட்ட காட்சி

## வெடிககாத குணடை எடுதது விளையாடிய சிறாரகள் பலி

(பக்தாத்)
வெடிக்காமல் கிடந்த குண்டை அறியாமல் எடுத்து விளையாடிய சிறுவர்கள் அது வெடித்துச் சிதறியதில் அந்த இடத்திலேயே பலியாகினர்.

ஈராக்கின் பஸ்ரா நகரில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 6 சிறுவர்கள் பலியானதுடன் 8 பேர் காயமடைந்துள்ளனர்.

ஈராக்கில் யுத்தம் ஓய்ந்த போதும் அமெரிக்கக் கூட்டுப்படையினர் வீசிய பெருமளவு குண்டுகள் ஆங்காங்கே வெடிக்காமல் இருக்கின்றமையும்,

இவற்றைச் சேகரித்து அழிக்கும் பணியில் அமெரிக்கக் கூட்டுப் படையினர் ஈடுபட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-9)

# படையினர் வசமுள்ள வீடுகளை மீள ஒப்படைக்க நடவடிக்கை

## இராணுவத் தலைமையகத்தால் மக்கள் தொடர்பு இணைப்பாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

**யாழ். குடாநாட்டில் படையினர் நிலைகொண்டுள்ள பொது மக்களின் வீடுகள் மற்றும் படையினர் வசமுள்ள அவர்களின் சொத்துக்களை கையளிப்பதற்கான நடவடிக்கையில் படைத் தரப்பினர் ஈடுபட்டுள்ளனர்.**

இதன் பிரகாரம், சம்பந்தப்பட்ட பொதுமக்கள் தொடர்பு கொள்வதற்கென, லெப்டினனட் கேணல் எம்.ஜி.இரத்தினநாயக்க, மக்கள் தொடர்பு இணைப்பாளராக இராணுவத்தலைமையகத்தால் நியமிக்கப் பட்டுள்ளார்.

தமது வீடுமற்றும் காணியை மீளப்பெற விரும்பும் அதன் உரிமையாளர்கள் இவைகுறித்த சகல விபரங்களுடனோ அல்லது தத்துவ உரிமையுடனோ தபால் மூலமாகவும் அல்லது நேரடியாகவும் தொடர்பு கொள்ளலாம் என மக்கள் தொடர்பு இணைப்பாளர் எம்.ஜி.இரத்திநாயக்க அறிவித்துள்ளார்.

நேரிலாயினும் சனி,ஞாயிறு தினங்களில் காலை9மணிமுதல் பி.ப.2மணி வரையும் மூன்றாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள சிவில் நிர்வாகக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மேற்படி விலாசத்திற்கு தபால் மூலம் விண்ணப்பித்தும், விண்ணப்பப்படிவங்களைப்பெறமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அண்மையில் திரட்டிய விபரங்களின் படி,

பாதுகாப்புப்படையினரால் ஏற்படுததப்பட்டுள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் காரணமாக 30 ஆயிரத்து 395 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

தவிரவும், 242 பாடசாலைகள் மற்றும் ஆலயங்களும்29 ஆயிரத்து 525 வீடுகளும் 25வீதிகளும் இப்பகுதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதைவிட,ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள முகாம்களால 435 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 48 பொதுக் கட்டடங்கள் 390 வீடுகள் என்பன இம்முகாம்களுக்குள் அடங்கியுள்ளன என்பது தெரிய வந்துள்ளது. (உ-43)

## சட்டவிரோத கட்டடங்களை அகற்ற நடவடிக்கை

(சுதுமலை)

பிரதேசசபை, நகரசபை, வீதி அதிகாரசபைகளின் அனுமதியைப்பெறாது விதிமுறைகளுக்கு அமையாது வீதியோரங்களில் அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களை அகற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உள்ளூராட்சி மன்றங்களுக்கு வீதிஅதிகாரசபை உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான சுற்றுநிருபத்தில் உள்ளூராட்சி மன்ற எல்லைக்குள் புதிதாக கட்டடங்களை அமைக்கவோ அல்லது மாற்றம் செய்யவோ விரும்பின் உள்ளூராட்சி மன்றத்தில் கட்டட விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அனுமதி பெற்ற பின்னரே கட்டடம் அமைக்கப்பட வேண்டும்.

கட்டடம் கட்டிமுடித்த பின் விண்ணப்பப் படிவம் சமர்ப்பித்தால் கட்டடங்கள் அகற்றப்படும்.மேலும் பொது மக்கள் கட்டடம்அமைப்பதற்கு முன்னர் இது பற்றிய ஆலோசனைகளை உள்ளூராட்சி மன்ற அலுவலகத்தில் உள்ள தொழில் நுட்ப உத்தியோகத்தரிடமோ அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடமோ பெறுதல் வேண்டும்என தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-252)

## பாடசாலை மாணவர்களுக்கு சின்னமுத்து தடுப்பூசி

(சுதுமலை)

எதிர்வரும் ஜூன்,ஜூலை, ஆகஸ்ட் ஆகிய மாதங்களில் யாழ். மாவட்டத்தில் உள்ள தரம் 5முதல் பத்துவரை கல்வி கற்கும் மாணவர்களுக்கு சின்னமுத்து தடுப்பூசி மருந்து வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பான அடிப்படை விபரப் பட்டியல்கள் சகல பாடசாலை அதிபர், வகுப்பாசிரியர்கள் மூலமாக பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களால் பெறப்பட்டுவருகின்றன.

மேலும்,பாடசாலைக்குச் செல்லாத மேற்குறித்த வயதையுடையவர்களின் விபரங்களும் திரட்டப்பட்டு வருகின்றன.

இத்தரவுகள் யாவும் யாழ். மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் அலுவலகத்தினரால் தொகுக்கப்பட்டு சுகாதார அமைச்சுககு அனுப்பிவைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.(உ-252)

## மீளக்குடியமரும் முஸ்லிம்களுக்கு வேண்டிய உதவிகளனைத்தையும் செய்யத்தயார்

### இந்து கலாசார அமைச்சர் உறுதிமொழி

(யாழ்ப்பாணம்)

தற்போதுமீளக்குடியேறி சமாதான சூழ்நிலையில் வாழ்ந்து வரும் நாம் அனைவரும் முன் போல சமாதானமாக வாழ்வோம்.

இவ்வாறு நேற்று முன்தினம் யாழ்.ஐந்து சந்தியில் நடைபெற்ற மீலாத்விழாவில் பிரதமவிருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர்அங்கு மேலும் கூறுகையில் இன்றைக்கு கிட்டத்தட்ட 13 ஆண்டுகளுக்கு முன் இதே இடத்தில இன,மத,மொழி பேதமற்ற சகோதரத்துவத்துடனும், சந்தோசமாகவும் நாம் வாழ்ந்து வந்தோம்.

ஆனால் கடந்த காலத்தில் ஏற்பட்ட அனர்த்தங்களால் பாதிப்புற்று இடம்பெயர்ந்து சென்று பிரிந்து வாழ்ந்தோம்.

முஸலிம் மக்கள் கடந்த 13 வருடங்களாக இடம்பெயர்ந்து நாட்டின் பல பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றார்கள்.

அவர்கள் இங்கிருந்து செல்லும் போது தமது உடைமைகள் மற்றும் கல்வி போன்ற சொத்துக்களை இழந்தே சென்றார்கள். இதனால் இன்றும் பலர் எந்த வித வசதியுமின்றி வாழ்ந்துவருகின்றனர்.

இன்று சமாதான சூழ்நிலை ஏற்பட்டு முஸ்லிம்கள் தமது பிரதேசங்களில் மீளக்குடியேறி வருகின்றனர். அவர்களுக்குத்தேவையான எல்லா உதவிகளையும் செய்வதற்கு நாம் தயாராகவேயுள்ளோம்.

இந்த வகையில்,மீள் குடியேறிய முஸ்லிம் மக்களின் அபிவிருத்திக்காக, அரசு இந்த வருடம எனக்கு வழங்கும் பன்முகப்படுத்தப்பட்ட நிதியான நூறு இலட்சம் ரூபாவில் 25இலட்சம் ரூபாவை முஸ்லிம்களுக்காக ஒதுக்கித் தருவேன்.

சமாதான முயற்சிகள் வெற்றியடையக்கூடாது என்றகுறிக்கோளில உலக நாடுகள் உறுதியாக நிற்கின்றன.எனவே, வேறு நாடுகளை நம்புவதை விடுத்து,நம்நாட்டில் சமாதானம் ஏற்பட ,நர்ம் அனைவரும்சேர்ந்து ஒன்றுபட்டு சந்தோசமாகவும்சகோதரத்துவத்துடனும் வாழ்வோம் என்றார். (உ-8)



## நிக்கோட் நிவாரணத்திட்டம்

(கொழும்பு)

ஐரோப்பிய மனிதாபிமான நிதி நிறுவனத்தின் நிதி உதவியுடன், இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க மேற்பார்வையின் கீழ்,கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகமும்,இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்டக் கிளையும் இணைந்து நிக்கோட் நிவாரணத் திட்டத்தை ஆரம்பித்துள்ளன.

இத்திட்டத்தின் கீழ்,முதல் கட்டமாக கிளிநொச்சி மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்டு மீளக்குடியமர்ந்த ஆயிரத்து 509 குடும்பங்களுக்கு உணவுப்பொருள் அல்லாத நிவாரணப்பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. (தி)

## சமாதானமுயற்சிகளை இழுத்தடிப்பதில் ரணில் அரசு ஈடுபட்டு வருகிறது

### மட்டு.-அம்பாறை சிறப்புத்தளபதி ரமேஷ் குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு)

நண்டகால இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும்நோக்குடனேயே அரசாங்கத்துடன் சமாதானப்பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுவந்தோம். இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறை நல்ல தர்வு என உலக நாடுகள் வலியுறுத்தினாலும் அரச அமைப்பில் சமஷ்டி என்ற பேச்சுக்கே இடம் இல்லைப்போல் தென்படுகிறது.

இவ்வாறு, தமிழீழவிடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி த.ரமேஷ் வாகரையில் அமைக்கப்பட்ட கணனித் தொழில்நுட்ப நிலையத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்துள்ளார்.

அவாஅங்கு தொடர்ந்தும் பேசுகையில்;

தென்னிலங்கையில் ஏற்படும் பாராளுமன்ற அதிகாரத்துக்கும், நிறைவேற்று அதிகாரத்துக்குமிடையிலான போட்டிகளினால் பாதிக்கப்படுவது தமிழ்மக்களே.

இவர்களது இழுபறியை தமிழ் மக்களுக்கான தீர்வை தள்ளிப் போடும் உபாயமாக ஏனைய கட்சிகள் பயன்படுத்துகின்றன.

உலக நாடுகளுக்கு சமாதானம் எனக்கூறிக்கொண்டு ஐக்கியதேசிய முன்னணி அரசு காலத்தை கடத்தும்முயற்சிகளில் ஈடுபடுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீண்டும் ஒரு யுத்தத்தை ஆரம்பிப்பதா அல்லது இல்லையா என்ற முடிவு நோர்வேயிடமோ அல்லது வெளிநாடுகளிடமோ இல்லை.இலங்கை அரசின் கையில் தான் தங்கியுள்ளது.

20வருட காலயுத்தத்தில் ஆயிரக்கணக்கான போராளிகளையும் பொதுமக்களையும் இழந்துள்ளோம்.

இதன் விளைவாக பேச்சுக்களில் ஈடுபட்ட நாம்,பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தாது,அதனை இழுத்தடிக்கும் முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபடுவது தெளிவாகியுள்ளது.

இதனிடையில் இந்தியாவின் முன்னாள் இராணுவத் தளபதி சதீஸ் நம்பியாரின் அறிக்கை ஒரு தலைபட்சமாகவுள்ளது.

ஐக்கிய நாடுகள் சாசனத்தின் படி இனம் ஒன்று அடக்கி ஒடுக்கப்படும்போது,அது பிரிந்து சென்று தனிநாடு அமைக்கும் உரிமை உண்டு எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (தி)

## 2வது தங்கவேலியை பிரதமர் திறந்து வைத்தார்

(கொழும்பு)

அனுராதபுரம் ஸ்ரீ மகாபோதியின் பாதுகாப்பிற்கென அமைக்கப்பட்ட இரண்டாவது தங்கவேலி கடந்த புதனன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் திறந்துவைக்கப் பட்டது. இவ்வைபவத்தில் தாய்லாந்தின் கலாசார அமைச்சர் விறிவன்தியன்தொங் கலந்துகொண்டார்.

இந்த தங்கவேலியானது, அட்டமஸ்தானாதிபதி வணக்கத்திற்குரிய பல்லேகம ஸ்ரீநிவாஸதேரரினவேண்டுகோளின்படி நிர்மாணிக்கப்பட்டதும், இதற்கென வெளிநாட்டு, உள்நாட்டு உதவுநர்கள் உதவியிருந்தனர். தாய்லாந்து அரசாங்கம் தங்கமும், பணமும் அன்பளிப்பு செய்திருந்ததும குறிப்பிடத்தக்கது.

பௌத்த கொடிகளால் அலங்காக்கப்பட்ட அப்பகுதிக்கு அன்றைய தினம் மாலை4.00மணிக்கு பிரதமரும் ஏனைய முக்கியஸ்தர்களும் அழைத்துச்செல்லப்பட்டனர். மலர்கள் தூவப்பட்டு, பிரித் ,பக்திகீதங்கள் இசைககப்பட்டு, பக்தர்களின் கரகோஷத்தின் மத்தியில் பிரதமர் நினைவுக்கல்லை திரைநீக்கம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில், பிரதமர்ரணில் விக்கிரமசிங்கவும், எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்தராஜபக்ஷவும் பக்தர்கள் மத்தியில் உரையாற்றினர். வைபவத்தில் பௌத்த குருமார்கள்,தாய்லாந்தின் பிரதிநிதிகள் ஆகியோர் பெருமளவில் கலந்து கொண்டனர். (உ)

## முன்பள்ளிக்கு நிரந்தர கட்டடம் இல்லை

(வேலணை)

வேலணை நான்காம் வட்டார முன்பள்ளிக்கு நிரந்தர கட்டடம் இல்லாத காரணத்தால், இம்மாணவர்கள் அருகே உள்ள ஐக்கிய உதயமால் சனசமூக நிலைய கட்டடத்தில் போதிய வசதிகள் இன்றி கல்வி கற்று வருகின்றனர்.

இதனால்,சனசமூக நிலைய நாளாந்த செயற்பாடுகள் பாதிக்கப்படுவதுடன்,வாசகர்களுக்கு சிரமம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை,மேற்படி முன்பள்ளிக்கு நிரந்தர கட்டடமொன்றை அமைத்துக்கொடுக்க பொது நிறுவனங்கள் முன்வர வேண்டும் என சனசமூக நிலையத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (தி-47)

# இந்து நிறுவனங்களுக்கு காசோலை கையளிப்பு இன்று

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சினால் ஒரு தொகுதி இந்து நிறுவனங்களுக்கு இன்று மு.ப 10மணிக்கு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் வைத்து காசோலைகள் வழங்கப்படவுள்ளன.

உரிய ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்களின் பொறுப்பாளர்களை வந்து காசோலையைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம் - யாழ்ப்பாணம், தாவடி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம், ஓம் ஸ்ரீ பாலயடி விநாயகர் ஆலயம் - மீசாலை, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் - கைதடி, ஞான வைரவர் ஆலயம் - வரணி, நரசிங்க வைரவர் ஆலயம், திடல் குளம் - புன்னாலைக்கட்டுவன், நரசிங்க வைரவர் ஆலயம் - அளவெட்டி, திருப்பதி ஆச்சிரமம் - தெல்லிப்பழை, கருமாரி அம்மன் ஆலயம் - புன்னாலைக் கட்டுவன், ஸ்ரீ இராஜேஸ்வரி அம்பாள்ஆலயம் - பலாலி, கோப்பாய் வடக்கு மாதர் அபிவிருத்திச் சங்கம், ஸ்ரீகாளியாணை ஸ்ரீஞானவைரவர் ஆலயம் - புத்தூர், பெருந்தலை சிவன் கோயில் - நீர்வேலி, கிராம அபிவிருத்திச் சங்கம் - மாதகல், கிளுவையடி பிள்ளையார் ஆலயம் - மானிப்பாய், இளவாலை றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலை, ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயம் - சுன்னாகம், காளிகோயில் - குப்பிளான், மாயக்கை பிள்ளையார் கோயில் - பருத்தித்துறை, அனலைதீவு ஐயனார் கோயில், பெரியவிளான் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை இந்து மன்றம் - இளவாலை ஆகியவற்றிற்கே இன்று காசோலை கையளிக்கப்படவுள்ளது. (உ)

# தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை யாழ். மாவட்டச் செயலகம் திறப்பு

(தென்மராட்சி)

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் யாழ். மாவட்டச் செயலகம் நேற்றைய தினம் காலை யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

கல்வி மேம்பாட்டு பேரவையின் யாழ். மாவட்டத் தலைவரும், பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவருமான பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா, மனித நேய அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் சு.பரமநாதன், வடகிழக்கு மாகாண சபையின் கல்வி; கலாசார பணிப்பாளர் செ.மகாலிங்கம், தமிழாசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் ஆகியோர் பொதுச் சுடரை ஏற்றிவைத்தனர்.

தமிழீழ் தேசியக் கொடியை யாழ். மாவட்ட அரசியல் துறையின் துணைப் பொறுப்பாளர் செமமணனும், பேரவைக் கொடியை ஜீ.ரீ.சற். இணைப்பாளர் எஸ். கந்தசாமியும் ஏற்றிவைத்தனர்.

இதனைத் தொடர்ந்து பேரவையின் பெயர்ப் பலகையை யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் திறந்து வைக்க, பேரவையின் செயலகத்தை வடக்கு, கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

இவ்வைபவத்தில் பேரவையின் துணைப் பொறுப்பாளர் அருண் மாஸ்டரும் கலந்துகொண்டார். (உ-77,7,4)

### யாழில் மீலாத் - வெசாக் கொண்டாட்டங்கள்

# சிங்கள, முஸ்லிம் மக்கள் பெருமளவில் படையெடுப்பு

(ஈச்சமோட்டை)

கடந்த சில தினங்களில் பெருமளவு முஸ்லிம், சிங்கள மக்கள் யாழ். நகருக்கு வருகை தந்துள்ளனர்.

நபிகள் நாயகம் பிறந்த தினத்தை ஒட்டிய வழிபாடுகளில் கலந்துகொள்ளும் வகையில் பெருமளவு முஸ்லிம்களும், புத்த பெருமான் ஞானம்பெற்ற தினமான வெசாக் வழிபாடுகளில் கலந்துகொள்ள அதிகளவு சிங்கள மக்களும் யாழ். நோக்கி வந்துள்ளனர்.

'வெசாக்' கொண்டாட்டங்களையொட்டி யாழ். நாகவிகாரை மற்றும் ஆரியகுளம் பகுதியில் வெளிச்சக்கூடு, மின்விளக்கு அலங்காரங்கள் கண்ணைக் கவரக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, 'வெசாக்' தினத்தையொட்டி பல இடங்களில தானதர்மங்களில் படையினர் ஈடுபட்டமையும் காணமுடிந்தது.

யாழில் மூவின மக்களும் இவ்வாறு இயல்பாக தமது வழிபாடுகளையும் கொண்டாட்டங்களையும் நிகழ்த்தி சுமுகமாக இருப்பது சமாதானத்திற்கு கிடைத்த வெற்றியே என யாழ். மக்கள் தெரிவித்துள்ளனர்.(உ-59)

### காணாமல் போனோர் பற்றிய விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலிருந்து 1996, 97ஆம் ஆண்டுகளில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு நியமித்த விசேட குழுவின் 5ஆம் கட்ட விசாரணை இம்மாதம் 29ஆம் திகதி முதல் யூன் மாதம் 2ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

31ஆம் திகதி வலி. மேற்குப் பிரதேச சபை அலுவலகத்திலும் ஏனைய நாட்களில் யாழ்.மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்திலும் நடைபெறவுள்ளது.

இந்த விசாரணைகளை மேற்கொண்டு வரும் சிவநேசன் நேசையா தலைமையிலான குழுவின் செயலாளர் இக்பால் மற்றும் கமீலஸ் பெர்னாண்டோ, ஜெசிமா ஸ்மயில் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். (உ-8)

### வடக்கு-கிழக்கு மாகாண

## கல்வி அமைச்சின் செயலாளர்குழுவை

# வடமாகாண அதிபர்கள் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு கல்வி அமைச்சின் செயலாளர் குழுவினருடனான வடமாகாண அதிபர்கள் சங்க அங்கத்தவர்களின் சந்திப்பு கடந்த புதனன்று யாழ். வலய கல்வித்திணைக்கள முகாமைத்துவ மண்டபத்தில் இடம் பெற்றது.

இச்சந்திப்பின் போது வடமாகாண அதிபர்கள் சார்பாக பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

* பாடசாலைகளில் கடந்த காலங்களில் ஏற்பட்ட இழப்புக்களைச் சீர்செய்ய குறிப்பிட்ட காலத்தில் நடவடிக்கை எடுத்தல்.
* நிவாரண காவலாளி, சுகாதாரத் தொழிலாளி வெற்றிடங்கள் உடனடியாக நிரப்ப நடவடிக்கை எடுத்தல்
* இடப்பெயர்வு காரணமாக கடமைக்குச் சமுகமளிக்க முடியாதிருந்த அதிபர், ஆசிரியர், ஊழியர்களுக்கு மீள் நியமனம் வழங்கும் நடவடிக்கையைத் துரிதப்படுத்தல்
* பதவி உயர்வு பெற்ற அதிபர்களுக்கும் அவர்களின் தரத்திற்கேற்ற வகையில் பாடசாலைகளை வழங்குவதற்குரிய செயற்பாடுகளை மேற்கொள்ளல்
* ஆசிரிய ஆளணிகளைச் சகல பாடசாலைகளுக்கும் சமமாகப் பங்கீடு செய்தல்
* பாடசாலைத் தேவைகளுக்கான ஆவணங்களைக் கிடைக்கச் செய்தல்
* அதிபர் வினைத்திறன் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்
* அதிபர், ஆசிரியர்களுக்கு கணனி கல்வி வழங்குவதற்கான நிலையம் ஒன்றை ஏற்படுத்துதல்
* மாகாண மட்டத் தமிழ்திறன் போட்டியை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கான நடவடிக்கை எடுத்தல்
* மின்சாரக்கட்டணங்களுக்கான மானியத்தை அதிகரித்து வழங்கல்
* அதிபர், ஆசிரியர்களுக்கான செயலமர்வுகளை வருட ஆரம்பத்தில் நடாத்துதல்
* மாகாண மட்டப்போட்டிகளுக்கான பிரயாணச் செலவுகளுக்கான உரிய கொடுப்பனவுகளை வழங்குதல் போன்ற கோரிக்கைகளே முன்வைக்கப்பட்டன.

இதேவேளை, மேற்படி கோரிக்கைகள் தொடர்பில் சாதகமாகப் பரிசீலிப்பதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் உறுதிமொழி வழங்கப்பட்டது. (உ)

# ஆசிரியர்களின் கல்விச் சான்றிதழ்களை உறுதி செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

சகல ஆசிரியர்களினதும் கல்விச் சான்றிதழ்களை பரீட்சைத் திணைக்களத்தின் ஊடாக உறுதி செய்து கொள்வதற்கு கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

போலி கல்வித் தகைமைச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்து கடந்த 20 வருடங்களாக ஆசிரியத் தொழிலில் ஈடுபட்ட பலர் கண்டுபிடிக்கப்பட்டு சேவையில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

[illegible] அமைச்சு இந்நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதாக கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

### ஓராண்டு பூர்த்தி விழா

(திருநெல்வேலி)

தியாகதீபம் திலீபன் மருத்துவ மனையின் ஓராண்டு நிறைவு விழா நேற்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வடமராட்சி கிழக்கு ஆலயவெளிப் பகுதியில் கொண்டாடப்பட்டது.


இந்நிகழ்வில், விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர். (உ-43)


### தமிழீழ கல்விமேம்பாட்டு பேரவையின் திறப்புவிழா காட்சிகள்



யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் பொதுச்சுடர் ஏற்றுகிறார்.


தேசியக்கொடியேற்றும் யாழ். [illegible] வட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர்.


வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் பணிமனையை நாடா வெட்டித் திறந்து வைக்கிறார்.






வெசாக் பண்டிகையை ஒட்டி யாழ். நகரில் படையினர் அமைத்துள்ள கூடுகளையும், அலங்கரிக்கப்பட்ட யாழ். நாகவிகாரையின் வாயில் தோற்றத்தையும் படங்களில் காணலாம். *படங்கள்: க.பவன்*

# நாடகக் கலையில் நற்பெயர் பெற்ற கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை

நாடகக் கலையில் தனக்கெனத் தனி வழி அமைத்து இன்றும் அக் கலைக்கு ஈடு இணையற்ற சேவை யாற்றி, அக்கலையின் நுட்பதிட்பங் களை தமது நாடகங்களின் வாயி லாக நாடறியப் பரப்பிவரும் நாட கப் பேரறிஞர் ஏ.ரி. பொன்னுத்துரை அவர்களின் சேவை போற்றுதற் குரியது.

**நாடகமே உயிர்மூச்சு**

ஈழதது நாடக வளர்ச்சியில் ஏ.ரி.பொன் னுத்துரை அவர்கள் தனக்கென ஒரு சிறப்பிடம் பெற்றவர். தரமான நாடகங்களை நம் நாட்டில் மேடை யேற்றியதுமன்றித் தானே பிரதான நடிகராக நடித்தும் நாடகத்துறை க்கு மெருகூட்டியவர். ஈழத்தின் மரபு வழிவந்த தலைசிறந்த நாடகக கலைஞர்களாகிய கலையரசு க. சொாணலிங்கம்,'சானா'போன்றோரின் அரவணைப்பில் வளாந்த இவர், சிறந்த நடிகராக -நாடக எழுத்தாள ராக-இயக்குநராக-தயாரிப்பாளராக- நடுவராக-விமர்சகராக அன்று தொட்டு இன்றுவரை நாடகக் கலை ககு நல்ல பல தொண்டுகள் ஆற்றி நாடகமே உயிர் மூச்சாக வாழ்ந்து வரும் வள்ளல்.

'நினைவு அலைகளில் நாடகச் சிந்தனைகள்- கனவுலகில் நாடகக் காட்சிகள்.இன்பதுன்பச் சுமைகளும் நாடகங்கள் உயிரும் உயிருக்குறு துணையாம் இறையும் நாடகமே' இவ்வாறு வாழ்பவர்.

**நிறைகுடம்**

நாடகங்களை எழுதி-நெறிப் படுத்தி- தயாரித்து அவற்றில் நடிக் கும் கலைஞர்கள் மிகக் குறைவு. இக்குறை போக்கிய வள்ளல் தன்னுடைய ஆங்கிலப் புலமையின் துணைகொண்டு நாடகமேடை

நயினை கி. கிருபானந்தா

உத்திகளைக் கற்றறிந்து ஈழத்து தமிழ்நாடகங்களை வளர்ந்து விட்ட மேலைத்தேச மேடைநாடக உயர் நிலைக்கு உயர்த்த வேண்டும் என்ற உயர்ந்த எண்ணம் உடையவர்.

நாடக் கலைஞர் ஏ.ரி. பொன்னுத் துரை அவர்களுக்கு நிறைவு தந்த வரலாற்று நாடகம் 'நிறைகுடம்' ஈழத்தின் பலபாகங்களிலும் மேடை யேறி ஆசிரியர் இத்துறையில் நிறை குடம் என்பதைக் கோடிட்டுக் காட் டியது.

நாடகத் தமிழை வளர்க்க வல்ல புதிய பரம்பரையினர் வரிசையில் தனித்துவம் உடையவர்.இவர் உருவாக்கிய நடிகர் பலர் இன்று தமிழ் நாடக மேடையை அணி செய்கின்றனர். அவரின் அனுபவங் கள் தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழி காட்டிய வகைகளும் எம்மவர் நன்றியோடு நினைவு கூரத்தக்கன.

**பன்முக ஆளுமை**

'சிறந்த பண்பாளனும் இயற்கை யிலேயே சாந்தமான குணமுடைய வரும் எல்லோருடனும் இனிமை யாகப் பேசிப்பழகும் சுபாவம் உடை யவரும் அமைதியான, எளிமை யான தோற்றங்கொண்டவராகவும் காட்சிக்கு எளியவராகவும் கருத் திற்கு இனியவராகவும் இன்றும் உடல் உள நலத்தோடு உறவாடிக் கொண்டிருக்கும் ஏ.ரி. பொன்னுத் துரை அவர்கள் பன்முக ஆளுமை கொண்டவர்.

"வீழ் நாள் படா அமை நன் காற்றின் அஃதொருவன் வாழ் நாள் வழியடைக்கும் கல"

என்றார் வள்ளுவர்.அவரின் பொன மொழிக்கேற்பத் தமது வாழ்நாள்களை வீழ்நாள்களாக்காது முதுமையிலும் அயராது பணியாற்றி வரும் ஐயா அவர்களின் வாழ்நாள் வீழாது முடி வின்றி நீண்டு கொண்டேயிருக்கும் என்பதில்எவ்விதஐயமும்இல்லை. □

# அரசு — புலிகள் இடையிலான சமாதான பேச்சை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்

## நோர்வேக்கு டென்மார்க் வலியுறுத்து

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடு தலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப்பேச்சுவார்த்தைகளை நோர்வே அரசு மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என டென்மார்க் வலியுறுத் தியுள்ளது.

இலங்கைக்கான டென்மார்க் தூதர கம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும், தமிழீழ விடுதலைப்புலிகளும், அரசாங்கமும் சமாதானப் பேச்சுவார்த் தைகளை மீண்டும் ஆரம்பித்தால் மாத்திரமே நாட்டில் இயல்பு நிலை தோன்றும்.

அண்மையில் ஒஸ்லோவில் நடை பெற்ற இலங்கைக்கு உதவி வழங் கும் மாநாட்டில் டென்மார்க் அரசு குறிப்பிட்டது போன்று தமது முயற் சிகள் மற்றும் போரினால் பாதிக் கப்பட்ட பிரதேசங்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகள் என்பவற்றிற்காக தொடர்ந்தும் உதவி வழங்கும்.

இதனடிப்படையில்,அடுத்த மூன்று ஆண்டுகளில் இலங்கைக்கு 220 கோடிரூபாவை நன்கொடையாக வழங்கவும்,மேலும் இருவருட காலப் பகுதிக்கு 600கோடி ரூபாவை மீள லிப்புக் கடனாகவும் வழங்கவுள் ளோம்.

இது தொடர்பான நடவடிக்கை களை அரசு ஏற்கனவே ஆரம்பித் துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் சமா தானப் பேச்சுக்களில் மீண்டும் எவ்வளவு விரைவாக இணைவார் களோ,அவ்வளவுவிரைவில் 10 இலட்சம் அமெரிக்க டொலர்களை வடக்கு- கிழக்கு புனர்வாழ்வு நிதிக் காக வழங்க டென்மார்க் தயாராக வுள்ளது என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

# டோக்கியோ மாநாட்டில் பங்கேற்பதா? இந்தியாவின் முடிவு விரைவில் வெளியாகும்

(கொழும்பு)

அடுத்த மாதம் டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கான உதவி வழங்கும் மாநாட்டில் கலந்து கொள்வதா? இல்லையா? என்பது குறித்து இந்தியாவிரைவில் முடிவு எடுக்கவுள்ளது என இந்தியத்தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தியா எடுக்கவுள்ள இந்த முடிவானது, தமிழீழ விடுதலைப் புலிகள் மாநாட்டில் கலந்து கொள் வதா? இல்லையா? என்று எடுக்க வுள்ள முடிவிலேயே இந்தியாவின் முடிவும் அமையவுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

இதேவேளை, விடுதலைப்புலிகள் டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்வது குறித்து இன்னமும்ஒரிரு தினங்களில்அறிவிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் வாஷிங்டனில் நடைபெற்ற இலங்கைக்கு நிதி வழங்கும் முன்னோடி மாநாட்டுக்கு, தமிழீழவிடுதலைப் புலிகளுக்கு அழைப்புஇல்லாததனால், இந்தியா இம் மாநாட்டில் கலந்து கொண் டமை குறிப்பிடத்தக்கது. (வ)

# விபூதியை அணிந்து கொண்டு தவறு செய்யக்கூடாது

## பச்சையப்பன் கல்லூரி விரிவுரையாளர்

(கோப்பாய்)

இந்துமதம் அநாதியானது. காலத் தால் முற்பட்டது. அன்பு என்ற தத்து வததை தன்னகத்தே கொண்டுள்ளது. இவை ஒவ்வொன்றையும் எடுத்துக் காட்டுவதாக நாயன்மார், ஆழ்வார் களின் வாழ்க்கை முறையும் புராண இதிகாசங்களும் அமைந்துள்ளன. அப்பரும்,சம்பந்தரும் ஈழத்திலுள்ள ஈஸ்வரங்களை தமது தேவாரங்களில் பாடியுள்ளனர்.

தமிழகத்துக்கும்,ஈழத்துக்கும் இடையே உள்ள நெருங்கிய தொடர்பு இதன்மூலம் புலப்படுகிறது.

சென்னை பச்சையப்பன் கல்லூரி யின் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி வா.மு.சே.ஆண்டவர், கோப்பாய் வெள்ளெருவைப் பிள் ளையார் சனசமூக நிலைய முன்ற லில் நிலையத் தலைவர் சைவப்புல வர் மு.முரளிதரன் தலைமையில் நடைபெற்ற இரண்டாவது இந்து மகாநாட்டு எழுச்சிவிழாவில் உரை யாற்றுகையில் இவ்வாறு குறிப் பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்;

உலகிலுள்ள நாடுகளில் வழக் கிலுள்ள தமிழுக்கும்,ஈழத்தில் வழக கிலுள்ள தமிழுக்கும் அடிப்படை யில் வேற்றுமை உண்டு.

மற்றைய நாடுகளில் தமிழர்கள் குடியேறியதன் விளைவாகத்தமிழ் அங்கே வழங்கப்படுகிறது.

ஆனால்,இலங்கையில் வரலாற்றுக் காலம் தொட்டே தமிழர்கள் வாழ்ந் திருக்கிறார்கள்.

தமிழக மண் தமிழர்களுக்கு எந் தளவுக்குச் சொந்தமானதோ அந்த அளவுக்கு ஈழமண் தமிழர்களுக்கு சொந்தமானது.

ஈழத்தமிழ் மக்கள் ஏனைய நாடு களிலிருந்து வந்து குடியேறியவர் களல்ல.அவர்கள் இம்மண்ணிலேயே பிறந்து வளர்ந்தவர்கள். இப்பிரதேசத் துக்கு உரித்துடையவர்கள்.

ஆயினும்,சிங்களவர்கள் இம் மண் ணின் பூர்வீகக்குடிகளல்ல என்று அவர்களின் நூலான மகாவம்சம் சுட்டி நிற்கின்றது.

விஜயன் என்ற நாடுகடத்தப்பட்ட அரசன் தமிழ்ப்பெண்ணைக் காதலித்து இலங்கையில் சிங்களக் குடியேற் றத்தை நிறுவினான் எனவும் கூறப் படுகின்றது.

எனவே ,சைவத்தையும், தமிழை யும் சமச்சீருடன் வளர்க்கவேண்டிய பொறுப்பையும் இந்துக்களாக வாழ்ந்து இந்துதர்மத்தைக் காக்கவேண்டிய பொறுப்பையும் நாம் தட்டிக்கழிக்க முடியாது.அதுபோன்றே விபூதியை அணிந்து கொண்டு தவறு செய்ய வும் கூடாது என்றார். (உ-79)

# செய்தித் துளிகள்

## "ஆத்மா" வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

'ஆத்மா'சஞ்சிகையின் மார்ச்-ஏப்ரல மாத இதழ் பல்வேறு அம்சங்களைத் தாங்கி வெள்வந்துள்ளது. (உ)

## பாடசாலை இயங்குகிறது

(பளை)

இடப்பெயர்வின் காரணமாக இயங்கமுடியாமல் இருந்த கிளாலி றோ.க.த.க.பாடசாலை கடந்தவாரம் தொடக்கம் பளை அரசர்கேணியில் இயங்கி வருகின்றது. (உ-97)

## பஸ்சேவை ஆரம்பம்

(வேலணை)

மண்கும்பான்,சாட்டி வேலணை ஊடாக குறிகட்டுவான் வரை வட பிராந்திய போக்குவரத்துச்சபை மீண்டும் பஸ்சேவையை ஆரம்பித் துள்ளது.

இப்பகுதிகளில் மக்கள் தற்போது மீளக்குடியேறி வருவதை அடுத்தே, இந்த பஸ்சேவை ஆரம்பிக்கப் பட்டுள்ளது. (தி-47)

## அமுக்க வெடிகுண்டுகள் காலியில் மீட்ப்பு

(கொழும்பு)

வெளிநாட்டில் தாயாரிக்கப்பட்ட இரண்டு அமுக்க வெடிகளையும், இரண்டுகைக்குண்டுகளையும் காலி கராப்பிட்டிய பொலிஸார் நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளனர்.

இந்த நான்கு குண்டுகளும் கம்பிறப்பிட்டி ககாகல என்ற இடத்தில் மூன்று பெட்டிகளில் வைக்கப் பட்டிருந்த நிலையில், பொலிஸா ரால் மீட்கப்பட்டுள்ளன.

இந்தக்குண்டுகள் என்ன நோக் கத்திற்காக கொண்டுவரப்பட்டன என்பது தொடர்பாகப்பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-3)

## ஆரம்பக் கணித மாநாடு

(கோப்பாய்)

தேசியக்கல்வி நிறுவன ஆரம்பக் கணித செயற்திட்ட வள அணியி னரால் நடாத்தப்படவுள்ள யாழ். வலய ஆரம்பப்பாடசாலை ஆசிரி யர்களுக்கான ஆரம்பக் கணிதமாநாடு இன்று கோப்பாய் அரசினர் ஆசி ரியர் கலாசாலையில் நடைபெறவுள் ளது. (உ-79)

## ஆசிய அபி. வங்கி பிரதிநிதிகள் வருகை

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் குழு இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு நாளை மறுதினம் 19ஆம்திகதி கொழும்பு வரவுள் ளனர்.

இப்பிரதி நிதிகள் குழு திருகோண மலையில் அரசசார்பற்ற இணை யத்தின் தலைமைக் காரியாலயத் தில் அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளுடன் எதிர்வரும் 22ஆம திகதி கலந்துரையாடல்ஒன்றை யும் நிகழ்த்தவுள்ளனர். (உ-8)

## செயற்குழு தெரிவு

(பளை)

பச்சிளைப்பள்ளி ப.நோ.கூ.சங்க நடப்பாண்டிற்கான செயற்குழுத் தெரிவு அண்மையில் இடம்பெற்ற போது,தலைவராக சி.வரதராசர், உப தலைவராக சி. இராசலிங்கம், நெறி யாளர்களாக து.விநாயகமூர்த்தி, க.சபேசன்,சி.கஜேந்திரன்,இ.குமார வேலு,செ.அமிர்தநாயகம் ஆகியோா தெரிவுசெய்யப்பட்டனர். (உ-97)

## சொந்த இடத்தில் இயங்குகிறது

(பளை)

இடம்பெயர்ந்து பளை நகரப் பகுதியில் இயங்கிவந்த வேம் பொடுகேணி மகாவித்தியாலயம் இவ்வாரம் தொடக்கம் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள் ளது. (உ-97)

## மணியர்குளம் பாலம்திறப்பு

(வவுனியா)

நிக்கோட் திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவி யுடன் வவுனியாவில் நிர்மாணிக் கபபட்ட நூறு மீற்றர் நீளமான மணியர் குளம் பாலம் எதிர்வரும் திங்கட்கிழமை காலை வைபவ ரீதி யாக திறந்துவைக்கப்படவுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிடப்பிரதி நிதியான ஜோன் கூனி இந்த வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பாலத்தினை திறந்து வைக்கவுள்ளார்.

4.3 மில்லியன் ரூபாய் செலவில் செட்டிகுளம்,மணியர்குளம் வீதியில் இரண்டாவது மையில் கல்லில் இப்பாலம் அமைந்துள்ளது.

செட்டிகுளம் பிரதேச செயலர் செல்வி ரி.துரைச்சாமி தலைமை யில் நடைபெறவுள்ள இந்த விழா வில் வன்னிப்புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன்மசூர் மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கள் விடுதலைப்புலிகளின் வன்னி மாவட்ட அரசியல் துறைப்பொறுப் பாளர் நிக்கோட் திட்டப்பணிப்பாளர் ரி. லங்கா நேசன் வடக்கு கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக் களப் பணிப்பாளர் ஏ.ஈ. எஸ்.இராஜேந் திரா உட்பட பலர் கலந்து கொள்ள வுள்ளனர்.

கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட நிக்கோட் திட்டமானது தற்போது இராணுவ கட்டுப்பாடு அற்ற பிரதேசத் திலும் நடைமுறைப்படுத்தப்படவுள் ளது.வவுனியா மாவட்டத்திற்கு 274 மில்லியன்ரூபா ஒதுக்கீடு செய் யப்பட்டு நிக்கோட் திட்டத்திற்கான வேலைகள் நடைபெற்று வருகின் றதாக நிக்கோட் திட்டப்பணிப்பாளர் எஸ்.கிருபாசுதன் தெரிவித்துள் ளார். (உ)

## டயலொக் கையடக்க தொ.பே. செயலிழப்பு

(தென்மராட்சி)

யாழ்.குடாநாட்டில் கடந்த சில தினங்களாக டயலொக் கையடக்க தொலைபேசிகள் செயலிழந்துள் ளன.

இதனால் டயலொக் கையடக்க தொலைபேசிப்பாவனையாளர்கள் பெருத்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (உ-77)

# மூவின மாணவர்களும் இணைந்து கற்கும் வசதி ஏற்படுத்தப்படவேண்டும்

## அமைச்சர் அதாவுல்லா விருப்பம்

(கொழும்பு)

பாடசாலைப் பருவத்திலேயே மாணவர்களை இனரீதியாகப் பிரிக் கின்ற கல்விமுறை தோன்றிய பின்னரே இனவாதமும், பயங்கர வாதமும் தலைதூக்கியுள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் அஷ்ரப் காங்கிரஸ் ஸ்தாபகரும், நெடுஞ்சாலைகள் மற்றும் கிழக்குப் போக்குவரத்து அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா.

அக்கரைப்பற்று ஹிக்மா தொழில் நுட்பக்கல்லாரியின் 12வகு பட்ட மளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற் கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும் கூறுகையில், கடந்த காலங்களாக தமிழ், முஸ்லிம் உறவில் ஏற்பட்ட விரிசல்களால் நமது பழமைக்கால பசுமையான வாழ்வில் சில சிக்கல்கள் தோன் றின.

இருந்தாலும்,இன்று இந்த மண்ட பத்தில் தமிழ்-முஸ்லிம் மாணவர் களும் பெற்றோரும் எந்தவிதமான கலக்கமோ,வேறுபாடுகளோ இன்றி அருகருகே அமர்ந்திருப்பது நாம் கடந்த காலங்களில் தொலைத்த சமாதானத்தைப் பெறுவதற்கான தோர் சமிக்ஞை போல் தோன்று கிறது.

இத் தீர்வுத்திட்டங்கள் வரும் போது தமிழ், முஸ்லிம்மக்கள் சமமாகக் கணிக்கப்படவேண்டும். மீண்டும் தமிழ் ,முஸ்லிம்,சிங்கள மாணவர்களும் இணைந்து கற்கும் பாடசாலைகள் உருவாக வேண்டும என்றார். (உ-8)

# இன்று ஒரு தகவல்

## குருவைத் தேடிய பலன்

ஒருவர் நமக்கு நல்லவழி காட்டுவதற்கு ஒரு குருநாதர் கிடைப்பாரா என்று பல நாட்கள் ஏங்கித் தவித்தார். ஒருவரும் கிடைப்பதாகத் தெரியவில்லை. அவருடைய மனைவி ஒரு யோசனை சொன்னார். 'இதோ பாருங்கள் நாம் இருவரும்இப்பொழுது புறப்பட்டுக் காட்டுக்குப் போவோம் நடுக்காட்டில் ஒரு நடைபாதை ஓரமாக உட்கார்ந்து கொள்வோம. அந்தவழியால் நமக்கு முன்னாள் வருகின்ற முதல் மனிதன் யாரோ அவனையே குருவாக ஏற்றுக்கொள்வோம். என்ன சொல்கிறீர்கள்?' என்றார். இருவரும் சரி என்று ஒத்துக்கொண்டனர்.

உடனே அவர்கள் இரண்டுபேரும் புறப்பட்டுக் காட்டுக்குப் போனார்கள். நடுக்காட்டில் ஒரு பாதை ஓரமாக உட்கார்ந்திருந்தார்கள். அப்போது திருடன் ஒருவன் தான் களவாடிய பொருள்களோடு அந்தவழியாக வந்தான். இவர்கள் கண்டவுடன் ஓடிப்போய் அவன் காலில் விழுந்தார்கள். அவனின் காலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்கள். 'எங்களை வாழவைக்க வந்த வள்ளலே! நீங்கள்தான் எங்களுக்குக் குருநாதராக இருந்து ஒரு நல்ல வழியைக் காட்டவேண்டும். ஏங்கள் மனதில் உள்ள பாவங்களைப் போக்கவேண்டும். ஒரு நல்ல மார்க்கத்தைக் காட்டவேண்டும்' என்று வேண்ட ஆரம்பித்துவிட்டார்கள்.

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை! 'என்னஇது பழிபாவதுக்கு அஞ்சாமல் வழிப்பறி பண்ணுவது நமது தொழில், இவர்களுக்கு நாம் எப்படி வழிகாட்டுவது?' என்று யோசித்தான். 'சரி... உண்மையைச் சொன்னால்தான் இவர்கள் நம்மை விடுவார்கள் போல் இருக்கிறது' என்று நினைத்து 'ஐயா! நான் திருடன், நீங்கள் நினைப்பது மாதிரி இல்லை' என்றான். 'அதெல்லாம் இல்லை, நீங்கள்தான் எங்கள் குருநாதர்' என்று உறுதியாக இருந்தார்கள். அவர்கள் திருடன் தப்பிக் கொள்வதற்கு என்னவழி என்று யோசித்தார்கள்.

'சரி நீங்கள் இருவரும் அப்படியே பத்மாசனம் போட்டு உட்காருங்கள். கண்ணை மூடிக்கொள்ளுங்கள். நான் சொல்லும்வரையும் நீங்கள் அப்படியே உட்கார்ந்திருக்க வேண்டும்' என்றான். குருநாதர் கட்டளையா அதை அவர்கள் ஏற்றுக்கொண்டு கண்ணைமூடி உட்கார்ந்து விட்டார்கள். இவன் இதுதான் தருணம் என்று மெதுவாக அங்கிருந்து நழுவி ஓடித்தப்பிவிட்டான். அதன் பின்னர் அவன் காவலர்களிடம் மாட்டிக்கொண்டு சிறையில் போடப்பட்டான். இவர்களிருவரும் இப்படியே உட்கார்ந்திருந்தார்கள். இவர்களின் மன உறுதி கடவுளையே யோசிக்க வைத்ததாம். உடனே இறைவனும் இறைவியும் இவர்கள் முன்னாள் வந்துநின்று காட்சி கொடுத்தார்கள். 'நாங்கள்தான் வந்திருக்கிறோம் பக்தர்களே எழுந்திருங்கள்' என்று சொன்னார்கள்.

ஆனால், அவர்களோ பெருமானே எங்களுடைய குருநாதர் அனுமதியில்லாமல் இந்த இடத்தைவிட்டு நகரமாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். இறைவனுக்கோ இது மிகவும் சிக்கலாகப் போய்விட்டது. உடனே அந்தநாட்டு அரசனின் கனவில் இறைவன் தோன்றி சிறையில் இருக்கிற திருடனை விடுதலை பண்ணு என்று சொன்னார். திருடனுடைய கனவிலும் தோன்றி விபரத்தைச் சொன்னார். திருடன் விடுதலையானதும் நேராக அந்தக் காட்டுக்குப் போனான். அவர்கள் இன்னமும் கண்ணை மூடிக்கொண்டே அப்படியே உட்கார்ந்திருக்கிறார்கள்.

'உங்கள் குருநாதன் வந்திருக்கிறேன் கண்ணைத் திறவுங்கள்' என்றான். அப்பொழுதுதான் அவர்கள் கண்ணைத் திறந்தார்கள். இவன் நடந்தவை முழுவதையும் சொன்னான். அப்பொழுது ஆகாயத்தில் இருந்து ஒருகுரல் கேட்டதாம். உங்களுடைய தீவிர குருபக்தி போற்றுதற்குரியது. குருவிடம் பக்தி, பணிவு, நம்பிக்கை கொண்டிருப்பவர்கள் எதையும் பெறுவார்கள். அப்படியே நீங்களும் அடைவீர்கள் என்றது. அந்தக் குரல் தம்பதியினருக்கு ஞானத்தெளிவு வந்ததாம். அந்தத் திருடனும் திருந்தி நலலவனாக ஆகிவிட்டானாம்.

இது வாரியார் சுவாமிகள் சொன்னகதை. 'நம்பிக்கை எப்படிப்பட்ட நல்ல விளைவுகளையெல்லாம் ஏற்படுத்துகிறது என்பதை இதிலேயிருந்து நாம் புரிந்துகொள்ள வேண்டும்.'

குருவைத்தேடி காட்டுக்குப்போன இன்னொருவனுடைய கதை உங்களுக்குத் தெரியுமா? இவன் இந்தக்காலத்து இளைஞன். ஒரு நடுக்காட்டுக்குப் போய்விட்டான். யாரும் கிடைக்கவில்லை. அதுமட்டுமில்லை வழிகாட்டுவதற்கு ஒரு குருவைத் தேடிவந்தவன் இப்பொழுது வந்தவழியையே மறந்துவிட்டான். திரும்பிப் போவதற்கு வழி தெரியவில்லை. எப்படியோ வீட்டிற்குப் போனால் போதும் என்று ஆகிவிட்டது. ஒன்றும் புரியவில்லை. பசி, தாகம், பயம் இரண்டு நாட்களாகிவிட்டன. நல்லவேளையாக அந்த வழியாக ஒரு ஆள் வந்தான். இவன் ஓடிப்போய் அவன் கையைப் பிடித்துக்கொண்டு, 'ஐயா! நான் இந்த நடுக்காட்டில் வழிதவறிக் காணாமல்போய் இரண்டுநாட்கள் ஆகின்றன. நல்லவேளை என்னுடைய அதிர்ஷ்டம் உங்களைச் சந்தித்துவிட்டேன்' என்று உற்சாகமாகச் சொன்னான். இதற்கு அவன் 'மிகவும் சந்தோசப்படாதீர்கள் ஏனென்றால் நான் காணாமல்போய் நாலு நாட்கள் ஆகின்றன' என்றான்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# இலங்கை அரசிற்கு நிதி சேகரிப்பது எமது வேலையல்ல

## தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையில் இருந்து விலகவில்லை. தற்காலிக இடைநிறுத்தம் ஒன்றையே மேற்கொண்டுள்ளனர்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.

நேற்று முன்தினம் நோர்வே வெளிவிவகார அமைச்சர் பீற்றர் சன்னுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும் இடையில் கிளிநொச்சியில் நிகழ்ந்த சந்திப்பின் பின்னர் பத்திரிகையாளர்களை சந்தித்தபோதே தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், நோர்வே வெளிவிவகார அமைச்சரிடம் இங்கு நடைமுறைப்படுத்தப்பட்ட சமாதான முயற்சிகள், எமது மக்களது நிலை ஆகியன தொடர்பாகவும் அவர்களது அவாக்கள் எதுவும் நிறைவேற்றப் படாமை பற்றியும் எடுத்துக்கூறப் பட்டது.

தொடர்ச்சியாக ஆறு சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்றிருக்கின்றன. பல இணக்கப்பாடுகள் காணப்பட்டுள்ளன. ஆயினும, ஒன்றும் நடைமுறைப்படுத்தப்படாததால் மக்கள் அடைந்துள்ள ஏமாற்றமும், நம்பிக்கையீனமும் பற்றி எமது தலைவர் விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளார்.


இவற்றை நோர்வேக் குழுவினர் தெளிவான முறையில் விளங்கிக் கொண்டு, அவற்றை நடைமுறைப் படுத்துவதற்குரிய ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொள்ளவிருப்பதாக எம்மிடம் உறுதிமொழி வழங்கியுள்ளனர். அரசு இதுபற்றி எடுக்கும் முடிவிலேயே அனைவரது எதிர்காலமும் தங்கியுள்ளது.

வடக்கு, கிழக்கில் எமது மக்கள் பயன்பெறக்கூடிய அதிகாரமுள்ள நிர்வாக அலகை உருவாக்காமல் டோக்கியோ மாநாட்டில் உதவி கோருவதே சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளும் என்று நாம் கருதவில்லை.

அதேவேளை, இலங்கை அரசுக்கு நிதி சேகரித்துக் கொடுப்பது எமது வேலை அல்ல.

சர்வதேச சமூகம் இன்றுள்ள சமாதான சூழ்நிலையில், எமது சமாதான முன்னெடுப்புக்களை உறுதியாகவும் வெற்றிகரமாகவும் முன்னெடுப்பதற்கு தங்களது ஆலோசனைகளைத தெரிவித்துக் கொண்டிருக்கிறது.

உதவி வழங்கும் மாநாட்டில் கலந்துகொள்வதை விடுதலைப் புலிகள் புறக்கணிப்பது எமது தனிப்பட்ட முடிவல்ல. சர்வதேச சமூகம் எமது மக்களுக்கு அளிக்



கும் உதவிகளை பயன்படுத்தக் கூடிய வகையிலான ஒரு கட்டமைப்பும், உறுதியான ஏற்பாடுகளும் எடுக்கப்படும் பின்னணிதான் நாம் உதவிவழங்கும் மாநாட்டில் கலந்துகொள்வது தீர்மானிக்கப்படும்.

இந்திய முன்னாள் இராணுவத் தளபதி நம்பியாரிடம் பெற்ற ஆலோசனைகள் எவ்வாறானவை என நாம் கூறத்தேவையில்லை.

ஏனெனில், நம்பியாரிடம் ஆலோசனை பெற்றதும் இலங்கை அரசாங்கமே. எமது மக்களே அதற்குத் தகுந்த பதில் அளிப்பார்கள்.

எமது மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறுவது பற்றி நாம் வேறு ஒருவரிடம் சென்று கருத்துக்கேட்க முடியாது என்றார்.

(உ-8)

## பஸ்விபத்தில் 2பேர் பலி

(திருகோணமலை)

ஹபரண - திருகோணமலை வீதியில் நேற்று காலை இடம்பெற்ற சொகுசுபஸ் விபத்தில் 2 பேர் உயிரிழந்துள்ளதுடன் 20 பேர் படு காயமடைந்துள்ளனர்.

கொழும்பில் இருந்து திருகோணமலை நோக்கிச்சென்ற கொகுசு பஸ் பாதையை விட்டு விலகி மரம்ஒன்றுடன் மோதியதால் இவ்விபத்து ஏற்பட்டது. காயமடைந்தவர்கள் ஹபரண, கந்தளாய் ,அனுராதபுரம் ஆகிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(தி)

## இராசி பலன்

17.05.2003
(வைகாசி 03, சனி)

பிரதமை மு.ப. 7.30 வரை
துதியை வை. 5.28 வரை
அனுஷம் மு.ப. 12.10 வரை
இராகுகாலம் - 8.53 - 10.23
சுபநேரம் - 2.53 - 4.23

**மேடம்**
போசனசுகம், வாகன பயம், வாக்கு மேன்மை, முயற்சி தடங்கல்.

**இடபம்**
அபூர்வ சந்திப்பு, கலந்துரையாடல், திடீர்பயணம், பொருட்சேர்க்கை.

**மிதுனம்**
ஆரோக்கியம், ஜனவசியம், புத்தி சாதுரியம், தடைப்பட்ட காரியம் கைகூடும்.

**கடகம்**
தாழ்ந்த சுபாவம், செய்தொழில் விருத்தி, அதிகாரிகள் ஒத்துழைப்பு, கற்பனை மிகுதி.

**சிங்கம்**
பயந்த சுபாவம், திடீர் நன்மை, பிரயாணம், மனச்சஞ்சலம்.

**கன்னி**
கூட்டுமுயற்சி, எண்ணம்கைகூடும், தொழில் வருமானம்கூடும், தர்மம்.

**துலாம்**
முயற்சி தாமதம், விருந்துபசாரம், மாதர் நட்பு, கடும்வார்த்தை.

**விருச்சிகம்**
தெளிந்த சிந்தை, உறவினர் வருகை, காரிய அனுகூலம், போசன சுகம்.

**தனுசு**
கோபப்படுதல், எதிர்பாராத நன்மை, பிரயாண அலைச்சல், சுபசெலவு.

**மகரம்**
சுகவாழ்வு, குடும்பத்தில் நல்லகாரியம், நல்லவரவேற்பு, தொழில் சிறப்பு.

**கும்பம்**
தூரதேசச் செய்தி, நல்ல சம்பவம், முயற்சி கைகூடும், நண்பர் உதவி.

**மீனம்**
திர்ப்பந்தம், எடுத்தகாரியம் கைகூடும், சகோதரர் உதவி, தொழில் திருப்பம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்.

# அரசும் ~ எதிர்க்கட்சியும் கருத்தொருமை காணவேண்டும்

## உடுகம ஸ்ரீபுத்திரகித மகாநாயக்க தேரர்

(கொழும்பு)

மக்களின் நலன்கள் தொடர்பான விவகாரங்களை அரசாங்கமும் எதிர்க்கட்சியினரும் கருத்தொருமைப்பாட்டுடன் நடந்து தீர்த்துக்கொள்ள வேண்டும்.

அஸ்கிரிய பீடத்தின் பிரதம குரு வண, உடுகம ஸ்ரீ புத்திரகித மகாநாயக்க தேரர் மத்தியமாகாண ஆளுனரின் கண்டியில் உள்ள அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற பௌத்தமத நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் இருதரப்பினரும் வேறுபாட்டைக் களைந்தால் நாடு முன்னேற்றமடையும், தேர்தல் காலத்தில் கட்சிகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டாலும்கூட அரசாங்கம் அமைக்கப்பட்டவுடன் மக்களுக்கு சேவை செய்வதற்காக எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பும் அவசியமாகிவிடுகிறது.

தற்போதைய அரசியல் நெருககடிக்கு இந்த மனப்போக்கானது பெரிதும் உதவும் எனறு தாம் விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்(உ)

# ஸ்ரீ.சு.க - ஜே.வி.பி கூட்டு இறுதிப் பேச்சு நாளை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் கூட்டமைப்பது தொடர்பான இறுதிக்கட்டப் பேச்சுவார்த்தை நாளை ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

இவ்விரு கட்சிகளினதும் கூட்டமைப்பு தொடர் பான இறுதிக்கட்டப் பேச்சுக்களை கடந்த திங்கட் கிழமை நடத்துவது என முன்னர் தீர்மானிக்கப்பட்ட போதிலும், தற்போது தோன்றியுள்ள அரசியல் நெருக்கடிகள் காரணமாக இப்பேச்சுக்கள் ஒத்தி போடப்பட்டிருப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையகம் ஜே.வி.பி க்கு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. நாளை நடைபெறவுள்ள பேச்சுக்களில் இரு தரப்பினரும் ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திடலாம் என எதிர் பார்க்கப்படுகிறது. (தி)

## சதீஸ் நம்பியாரின் அறிக்கை

# விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்படவில்லை

(கிளிநொச்சி)

அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான இந்திய முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சதீஸ் நம்பியாரின் அறிக்கை விடுதலைப் புலிகளிடம் இன்னமும் கையளிக்கப்படவில்லை என தெரிய வருகிறது.

கடந்தவாரம் பாதுகாப்பு அமைச்சரிடம் கையளிக்கப்பட்ட இந்த ஆலோசனை அறிக்கையின் பிரதிகள் உடனடியாக ஜனாதிபதி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப் பட்டிருந்தன.

அத்துடன், தாமதமின்றி புலிகளிடம் கையளிக்கவிருப்பதாகவும் கூறப்பட்டது.

ஆயினும், அவ்வாறான அறிக்கை உத்தியோகபூர்வமாக இனனும் தமது கையிற்குக் கிடைக்கவில்லையென விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

(உ-8)

கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க முன்இன்று பின்நோக்காச் சொல் - குறள்

## வலம்புரி

### மீண்டும் மனச்சோர்வு

சமாதான முயற்சிகள் ஸ்தம்பித்தபோதிலும் மீண்டும் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படும் என்ற நம்பிக்கை பொதுவாக எல்லோரிடமும் இருந்தது. ஆனால் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் பீற்றசன் வன்னிக்குச் சென்று தலைவர் பிரபாகரனுடன் நடத்திய பேச்சுக்களின் போது விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு குறித்து தலைவர் பிரபாகரன் மிகத் தெளிவாக கூறியிருந்தார். அவரின் கருத்தின்படி புரிந்துணர்வு ஒப்பந்தம் சரியான முறையில் அமுல்படுத்தப்பட வேண்டும். அதே நேரம் உயர் பாதுகாப்பு வலயத்தின் மீளவும் மக்களை மீளக் குடியமர்த்த அனுமதிப்பதோடு வடக்கு கிழக்கு மாகாணங்களின் புனரமைப்புக்கென வழங்கப்பட்ட நிதியுதவி உரியவாறு செலவிடப்படவேண்டும். மேற்கூறப்பட்ட விடயங்களை அரசு நடைமுறைப்படுத்தத் தவறுமாயின் ஏழாம் சுற்று சமாதானப் பேச்சுக்களிலோ அல்லது அடுத்த மாதம் ஜப்பானில் நடைபெறவுள்ள இலங்கைக்கு நிதி உதவி வழங்கும் மாநாட்டிலோ விடுதலைப்புலிகள் கலந்து கொள்ளமாட்டார்கள்.

தலைவர் பிரபாகரனால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களைக் கேட்டறிந்து கொண்ட நோர்வே வெளிவிவகார அமைச்சர் பீற்றசன் உடனடியாக கொழும்புக்குத் திரும்பி புலிகளின் நிலைப்பாடு பற்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு எடுத்துக் கூறினார். எனினும் பிரதமர் இது விடயத்தில் என்ன கருத்தைக் கொண்டுள்ளார் என்பதை வெளிப்படுத்தாத பீற்றசன் தனது கருத்தில் விடுதலைப்புலிகள் ஜப்பான் மாநாட்டில் பங்குபற்றுவது மிகவும் அவசியமாகும் இலங்கையில் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகள் வெற்றியளிக்க வேண்டுமாயின் அரசும், விடுதலைப்புலிகளும் ஜப்பான் மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டும்.

ஏனெனில் இலங்கை இன விவகாரத்தில் சர்வதேசத்தின் உதவியும் ஒத்துழைப்பும் அவசியமாகும். இக் கருத்தை விடுதலைப்புலிகளிடம் ஏற்படுத்தவே முயன்றேன். எனினும் அது வெற்றியளிக்கவில்லை என பீற்றசன் கவலையோடு தெரிவித்துள்ளார்.

பீற்றசனின் கவலை நியாயமானதாக இருப்பினும் தலைவர் பிரபாகரன் தெரிவித்த விபரங்களை அரசு நிறைவேற்றாதது குறித்து எந்த கவலையும் அவர் வெளியிடாதது தமிழ் மக்களை வேதனைப்படுத்தியுள்ளது.

அதேவேளை ஜப்பான் மாநாட்டில் விடுதலைப்புலிகள் கலந்துகொள்ளாதது குறித்து சர்வதேசத்திற்கு விளக்கவேண்டிய பொறுப்பு தமக்கு உண்டு என்பதையும் பீற்றசன் தெரிவித்திருப்பது இங்கு நோக்கத்தக்குரியது. அதாவது புலிகள் மாநாட்டில் கலந்துகொள்ளாதது நியாயமானது என்ற அடிப்படையிலோ? அல்லது அவர்கள் கலந்து கொள்ளாதது நியாயமாகாது என்ற அடிப்படையிலா பீற்றசனின் விளக்கம் இருக்கப்போகிறது என்பதே இங்கு கேள்வி.

# மகளிர் பண்பாட்டு அமைப்பினை உருவாக்கி சமய, சமூகக் கட்டுப்பாடுகளைப் பேணுவோம்

2வது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் கடந்த 10ஆம் திகதி காலை 9 மணிக்கு கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் மகளிர் அரங்கு நடைபெற்றது. ''மகளிர் வாழ்வியலில் வழிபாடு, சமயம், மதம்'' என்ற வெவ்வேறு தலைப்புகளில் கட்டுரை ஆய்வாக ஆரம்பிக்கப்பட்ட இந்த அரங்கில் பலதரப்பட்ட துறைகளில் உள்ள பெண் பேச்சாளர்கள் பங்குபற்றினார்கள்.

சமய இலக்கிய காலப் பெண்களைப் பற்றியும், இந்து, பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயக் கோட்பாடுகள் பற்றியும், அவற்றால் பெண்களுக்கு விதிக்கப்பட்ட கடப்பாடுகள் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டன.

### ஆய்வுரைகள்

இன்றைய காலத்தில் வாழ்கின்ற பெண்களின் வாழ்க்கை முறைகள், பண்டைய கால பெண்களின் வாழ்க்கை முறைகள் பற்றியும் இன்றும் எம் மண்ணில் வாழ்கின்ற பெண்களின் வாழ்க்கை முறைகள், வெளிநாடுகளில் வேறுபட்ட சூழலில் வாழும் இந்தப் பெண்களின் வாழ்க்கை முறைகள் பற்றியும் மிகவும் துல்லியமாக எடுத்துக் கூறப்பட்டு அவற்றில் உள்ள வேறுபாடுகளும், காரணங்களும் விளக்கமாக அலசி ஆராயப்பட்டன.

செல்வி செல்வாம்பிகை நடராசா, செல்வி மலர் சின்னையா, செல்வி பகீரதி ஜீவேஸ்வரா ஆகியோரின் உரைகள்- ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பித்தமை போல அமைந்தாலும் விடயங்களை நன்கு தெளிவுபடுத்தின. திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம், திருமதி சரஸ்வதி ஜெயராஜா, திருமதி ஜெயமலர் தியாகலிங்கம் ஆகியோரின் உரைகள் யதார்த்தபூர்வ ஆராய்வாகவும் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சமய அனுட்டானங்களில் விரதம், பக்தி ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றி மிக விரிவாகப் பேசப்பட்டன. இடையிடையே திருமதி மனோன்மணி சண்முகதாஸ் வழங்கிய விளக்கங்கள் மிகவும் பயனுடையதாகவும், எமது இன்றைய மகளிரது சிந்தனைக்கு உட்பட்டதாகவும் அமைந்து இருந்தன.

### மகளிர் பண்பாட்டு அமைப்பு

இறுதியில் பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் பலரும் பலவிதமான கருத்துக்களை முன்வைத்தனர். குறிப்பிடக்கூடியதாக திருமதி சரோஜா சிவச்சந்திரன், ஆண் ஆதிக்கம் பற்றியும், மகளிர் தம்மை உணர்த்தும் தமது உரிமைகளை பாதுகாக்கக் கூடிய வகையில் சமூக சமய கட்டுப்பாடுகள் இருக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார். மதுரகவி காரை எம்.பி. அருளானந்தம் ஆலயங்களில் இன்றைய பெண்களின் அருவருக்கக்கூடிய உடை, நடை பாவனைகள் பற்றியும், சமயச் சடங்குகளான பூப்பு நீராட்டல், திருமணங்கள் ஆகியவற்றில் பெண்களை தெய்வ நிலைகளில் இருந்து பௌதிக நிலைகளுக்கு தாழ்த்துவது பற்றியும், தேவைகளுக்கு ஏற்றமாதிரி அந்த வைபவங்களை சாதாரணமான ஒன்றுகூடல் வைபவ மண்டபத்தில் நடத்துவது பற்றியும் மிகவும் ஆழமாக விமர்சித்தார். அடுத்து உரையாற்றிய சிவசண்முகவடிவேல் இவற்றுக்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைப்பது போல், இங்கு ஒரு மகளிர் பண்பாட்டு அமைப்பு உருவாக்கப்பட்டு இந்துப் பெண்கள் சமுதாயத்தை வழிநடத்தக்கூடிய சமய விழுமியங்களைப் பேணக்கூடியதாக ஆக்கப்படவேண்டிய தேவை பற்றி ஒரு பிரேரணையை முன்வைத்து அதை மாநாட்டுப் பேரவை அங்கீகரித்து, இந்து கலாசார அமைப்புக்கு அறிவிப்பதாக முடிவு செய்யப்பட்டது.

நிறைவாக இந்த மகளிர் அரங்கு மிகவும் ஆக்கபூர்வமான அரங்காக நடத்தப்பட்டது என்பதில் ஐயமில்லை.

**நயினை விஜயன்**

# பிரதி அமைச்சருக்கு எதிராக பிடி விறாந்து பிறப்பிப்பு

(கொழும்பு)

கூட்டுறவு பிரதி அமைச்சர் முகைதீன் அப்துல் காதருக்கு எதிராக மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

ஏறாவூரைச் சேர்ந்த நபர் ஒருவரிடம் வெளிநாட்டிற்கு அனுப்புவதாகக் கூறி பல இலட்சம் ரூபா பெற்றுக்கொண்டு ஏமாற்றிவிட்டதாக மேற்படி நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இம்மனு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் நான்கு தடவைகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

ஆனால் இவ்விசாரணைகளின் போது பிரதி அமைச்சரோ அன்றி அவர் சார்பில் வேறு எவருமோ ஆஜராகாததை அடுத்தே நீதிமன்றம் அவருக்கெதிராக பிடிவிறாந்து பிறப்பித்துள்ளது.

தன்னை வெளிநாட்டிற்கு அனுப்புவதாக கூறி பணம் பெற்றுக் கொண்டு அனுப்ப மறுத்ததுடன் பணத்தையும் திருப்பி வழங்க பிரதி அமைச்சர் மறுத்துவிட்டார் என அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

# மிதிவெடியில் சிக்கி குடும்பஸ்தர் காலிழப்பு

## ஆவரங்காலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

தென்னம் தோட்டத்தில் தேங்காய் பிடுங்கியவர் மிதிவெடியில் சிக்கி இடது காலை இழந்துள்ளார்.

ஆவரங்கால் 10ஆம் கட்டைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த எஸ்.குமாரசாமி (வயது 28) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே காலை இழந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை இப்பகுதியில் முன்னர் படையினர் நிலைகொண்டிருந்ததாக அறியப்படுகிறது. (உ-7)

# ஐ.தே.க. நிறைவேற்றுக்குழு அங்கத்தவர் மாநாடு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் நிறைவேற்றுக் குழு அங்கத்தவர்கள் மாநாடு எம்பிலிப்பிட்டியவில் உள்ள மகாவலி விளையாட்டு அரங்கில் எதிர்வரும் ஜூலை மாதம்3ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 3நாள்கள் நடைபெறவுள்ள இம்மாநாட்டில் கட்சி தொடர்பாக முக்கிய பல விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளன.

கட்சியின் நிறைவேற்றுக் குழுவில் அங்கம் வகிக்கும் அனைத்து உறுப்பினர்களும் இம்மாநாட்டில் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொது ஜன ஐக்கிய முன்னணிக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் கட்சி ரீதியாக ஏற்பட்டுள்ள விடயங்கள் அரசியல் அதிகாரங்கள் எதிர்க்கட்சியினரின் செயற்பாடுகள் மற்றும் கட்சி ரீதியான நடவடிக்கை என்பன குறித்து இம்மாநாட்டில் ஆராயப்படவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (தி)

# ஆற்றில் குளித்துக்கொண்டிருந்த ஆறுபேர் நீரில் மூழ்கி மரணம்

(இரத்தினபுரி)

ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த சமயம் நீர்ச்சுழியினால் இழுத்துச் செல்லப்பட்ட 6 பேர் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

இரத்தினபுரி கப்புகஸ்கந்த பகுதியில் உள்ள நீர்மின் நிலையத்திற்கு அருகில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்றுக்காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் நீர்ச்சுழியினால் இழுத்துச்செல்லப்பட்ட உயிரிழந்தவர்களில் 5 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. காணாமல் போனமற்றைய நபரைத் தேடும் பணிகள்இடம பெறுகின்றன. கொழும்பிலிருந்து இரத்தின்புரிக்குச் சென்றவர்களே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (த)

# ரயில்வே திணைக்களத்திற்கு 102 கோடி நஷ்டம்

## மத்திய வங்கி அறிவிப்பு

(கொழும்பு)

கடந்த காலங்களில் ரயில்வே திணைக்களத்திற்கு 102 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டதாக மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நஷ்டம் வரவு செலவுத் திட்டத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் இதனால் ரயில்வே திணைக்களத்தின் நடவடிக்கைகள் துரிதமாக புனரமைக்கப்பட வேண்டும் எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நஷ்டத்தை நிவிர்த்தி செய்யும் வகையில் அரசு அதனை தனியார் மயப்படுத்த முயற்சி செய்து வருவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டிவருவது குறிப்பிடத்தக்கது. (தி)

# வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வோர் வீதம் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையின் சனத்தொகையில் 25 தொடக்கம் 39 வீதமானோர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

வறுமையைக் குறைக்கும் திட்டத்தின் கீழ் இக்கணிப்பீடு நடத்தப்பட்டதாக மத்திய வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைய வறுமையை ஒழிக்கும் மத்தியதரப் பொருளாதார வளர்ச்சித் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த அரசு தீர்மானித்துள்ளது.

கடந்த கால யுத்தத்தைத் தொடர்ந்து வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்கள் தொகை அதிகரித்துள்ளதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

## தினசரி தியானம்

### புலன் இன்பம்

புலன் வழி பெறும் இன்பத்தில் பல குறைகள் உள்ளன. பலவகைப் பாவங்கள், வேதனைகள், தளர்வுகள், அடிமை மனப்பான்மை, வலுவற்ற அடக்கம், போராட்டம், தீய பழக்கங்கள், அடக்கஇயலா ஆசைகள், மன அமைதியின்மை ஆகியவை இவ்வின்பத்தில் உள்ளன. எனவே எல்லாப் புலன் இன்பங்களையும் விட்டொழியுங்கள். மாற்றம் இல்லாத முடிவு இல்லாத உயர்ந்த இன்பத்தைப் பரம்பொருளிடமிருந்து பெறுவதற்காகக் காத்திருங்கள்.

**சுவாமி சிவானந்தர்**

## உலக உணவுத் திட்டத்தின் கீழ்

# வடக்கு-கிழக்குப் பகுதிகளில் போஷாக்குத் திட்டம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உள்ள சிறுவர் மற்றும் தாய்மார்களுக்கு போஷாக்கு உணவுகள் வழங்கப்படவுள்ளதாக புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா அமைச்சில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

உலக உணவுத் திட்டத்தின் அனுசரணையுடன் அடுத்த மாதம் இத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த 8 லட்சம் மக்கள், 366 அகதி முகாம்களில் தற்போது வாழ்ந்து வருகின்றனர். மார்களும் பெருமளவு ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளும் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

உலக உணவுத் திட்டம் கடந்த 3 ஆண்டுகளுக்கு நிதியுதவியாக ஒரு இலட்சத்து 73 ஆயிரம் அமெரிக்க டொலரை வழங்கியது. மேலும் 55 இலட்சம் அமெரிக்க டொலரை வழங்க உலக உணவுத் திட்டம் முன்வந்துள்ளது.

உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்படவுள்ள இம்மேலதிக நிதி வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட 30 ஆயிரம் விதவைகளுக்கு சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தவும், விவசாய முயற்சிகளுக்காகவும் வழங்கப்படவுள்ளதாக அவர் அங்கு தெரி

# காய்ச்சல் மறுதலிப்பு சிறுவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்டிருந்த இரண்டு வயதுச் சிறுவன் ஒருவன் சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்ட வேளை இடை வழியில் உயிரிழந்துள்ளான்.

நேற்றுக்காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஆனைக்கோட்டை கூளாவடியைச் சேர்ந்த யூனியன் டிலக்சன் என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

இனந்தெரியாத காய்ச்சல் காரணமாக யாழ் போதனா வைத்தியசாலையில் ஒருவாரமாக சிகிச்சைபெற்று வந்த பிரஸ்தாபச் சிறுவன் காய்ச்சல் குணமடைந்ததைத் தொடர்ந்து வீட்டிற்குச் சென்றுள்ளார் வீட்டில் மீண்டும் காய்ச்சலால் பீடிககப்பட்டதைத் தொடர்ந்து நேற்றுக் காலை வைத்தியசாலைக்கு கொண்டுவரும் வழியில் உயிரிழந்தார். (த-7)

## மீள் குடியமர்விற்கு ரூ. 2000 கோடி தேவை

(கொழும்பு)

தமிழர் தாயகப் பகுதிகளில் போரினால் இடம்பெயர்ந்து வாழும் 2 இலட்சத்து 27 ஆயிரம் மக்களை மீளக்குடியமர்த்த 2 ஆயிரம் கோடி ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மதிப்பீட்டை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஆணையமும் புனர்வாழ்வு அமைச்சும் இணைந்து மேற்கொண்டுள்ளன.(த)

# சார்ஸ் நோய்க்கு சிகிச்சை அளிக்க விரைவில் புதிய சட்டம் அமுல்

(கொழும்பு)

சார்ஸ் தொற்று நோய் ஏற்பட்டிருக்கும் எனத் திடமாக நம்பப்படும் நோயாளிக்கு சிகிச்சை வழங்குவதற்கென புதிய சட்டம் விரைவில் அமுலுக்கு வரவிருக்கின்றது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

தற்சமயம் இலங்கையில் இந்த நோயினால் பீடிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை வழங்க சட்ட ஏற்பாடுகள் எதுவும் கிடையாது எனவும் கொலறா, மஞ்சள்காமாலை போன்ற நோய்களிற்கு வைத்திய சாலையில் சிகிச்சை மேற்கொள்வதற்கு மட்டுமே தற்போதைய சட்டம் அனுமதியளிக்கிறது என்றும் புதிய சட்டத்தை வர்த்தமானியில் பிரசுரிக்க சுகாதார அமைச்சு நடவடிக்கைகள் எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் போதனா வைத்தியசாலையில் சார்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டவர் எனச் சந்தேகிக்கப்படும் இளம் பெண் இறந்ததை அடுத்து யாழ் போதனா வைத்தியசாலையில் சார்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையை வழங்குவதற்கு தேவையான உபகரணங்களும் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (த)

# நிதி மோசடி செய்த ரெலிக்கொம் அதிகாரி கைது

(கொழும்பு)

இலங்கை ரெலிக்கொம் நிறுவனத்தின் உயரதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் சி.ஐ.டி யினரால் கைது செயயப்பட்டுள்ளார். சுமார் 60 மில்லியன் ரூபாக்களை இவர் நிறுவனத்திலிருந்து மோசடி செய்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இப்பெரிய மோசடிபற்றி ஏனைய அதிகாரிகள் கொடுத்த இரகசிய தகவல்களின் அடிப்படையிலேயே கண்டிப் பொலிசாரும் சி.ஐ.டி யினரும் இவரைக் கைதுசெய்துள்ளனர். ரெலிகொம் உபகரணங்களையும் பணத்தையும பல வருடங்களாக இவர் திருடிவநததாகவும் இதன்மூலம் இவர் 6 ஆடம்பர வீடுகளை கட்டியிருந்ததாகவும் பொலிசார் தெரிவிக்கின்றனர். (ந)

---

**ஜனாதிபதிக்கு...**

பாக பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதியின் கடிதத்திற்கு விரிவான பதில் கடிதம் ஒன்றை தயாரிக்கும் பணியில் பிரதமரின் செயலகம் ஈடுபட்டு உள்ளது. விரிவான கடிதம் வெகு விரைவில் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.(வ)


## MEDICAL CHECK UP
## வைத்திய பரிசோதனை

**நோய் வருமுன் காப்போம்**
**திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்**

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
- X-RAY- ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள் சிறுநீர்ப் பரிசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**

(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


# மண்டைதீவில் நாளை சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு பொதுமக்களும் மண்டைதீவு கண்டுப்புளியடி சிவஉக்கிர வீரபத்திரர் தேவஸ்தானமும் இணைந்து நாளை ஞாயிற்றுக் கிழமை மாபெரும் சிரமதானப்பணியை மேற்கொள்ளவுள்ளனர்.

இராணுவ நடவடிக்கைகளின் பினனர் தற்போது மண்டைதீவில் மக்கள் மீளக் குடியமர்ந்து வருவதையடுத்து வீதிகள் மற்றும் பொது இடங்களை மக்கள் சிரமதானம் மூலம் திருத்தி அமைத்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

---

**புலிகள்...**

இலங்கை அரசுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை விடுதலைப் புலிகள் தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்திருப்பதை அடுத்து சமாதானப் பேச்சுவார்த்தையை மேலும் வலுப்படுத்துவதற்கு சம்மந்தப்பட்ட இருதரப்பினரும் யப்பான் மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும். இலங்கையில் சமாதானப் பேச்சு வார்த்தைக்கு. சர்வதேச சமூகம் காட்டிவரும் பேராதரவை வலுப்படுத்துவதற்கும் விடுதலைப் புலிகள் யப்பான் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வது அவசியமாகும்

சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் நடைபெறவுள்ள டோக்கியோ மாநாட்டை இருதரப்புச் சம்மதத்துடன் குறிப்பிட்ட திகதி ஒன்றில் நடத்துவதையே யப்பான் அரசு விரும்புகிறது.

இதேவேளை யப்பானில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் விடுதலைப் புலிகள் பங்கு கொள்வார்களென யப்பான் அரசு நம்பிக்கை கொண்டுள்ள தாகவும் யப்பான் தூதரகம் தெரிவித்துள்ளது. (வ)

---

**ஜனாதிபதி..**

ஏற்கனவே பெற்ற அனுபவங்களுக்கு அமைய நடந்துகொள்ளுமாறும் அமைச்சர்களை அவர் கேட்டுக் கொண்டார்.

அமைச்சர் ஹக்கீமும் இச் சந்திப்பில் கலந்துகொண்டார். (த)

---

**கடத்தப்பட்ட...**

சேனைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலத்தை உறவினர்களிடம் கையளிகுமாறு உத்தரவிட்டார். (த-3)

---

**ஜனாதிபதியின்...**

ருக்கும் வழங்கப்பட்டுவரும் பாதுகாப்பு எந்த வகையிலும் தளர்த்தப்படமாட்டாது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையைச் சுற்றி போடப்பட்டுள்ள பாதுகாப்பு வேலி அகற்றப்படமாட்டாது என்றும் முன்னாள் அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் வீட்டுக்கு அருகிலேயே போடப்பட்டுள்ள வீதித் தடைகளும் அகற்றப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

---

**புலிகளின்...**

குழுவினர் சம்பவ இடத்தைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

இதேவேளை புளொட் உறுப்பினர் ஒருவரே தமது அலுவலகம் மீது கைக்குண்டை வீசியதாகவும் சம்பந்தப்பட்ட நபரையும் அவர் சென்ற மோட்டார் சைக்கிளின் இலக்கத்தையும் தம்மால் அடையாளம் காட்டமுடியும் என்றும் விடுதலைப் புலிகளின் மட்டு அலுவலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். ஆயினும் மேற்படி சம்பவத்திற்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என புளொட் வட்டாரங்கள் மறுத்துள்ளன. (உ)

---

**நோர்வே...**

கவே இச்சந்திப்பு இடம்பெறவுள்ளது

நோர்வே வெளிவிவகார அமைச்சர் பீற்றசன்னிடம் தலைவர் பிரபாகரன் சுட்டிக் காட்டிய விடயங்களுக்கும் அரசு தரப்பின் பிரதிபலிப்புக் குறித்து அவர் புலிகளுக்கு விளக்குவதுடன் இருதரப்பையும் டோக்கியோ மாநாட்டில் பங்கேற்கச் செய்யும் இறுதி முயற்சியிலும் தொடர்ந்து ஈடுபடவுள்ளார்.

இதேவேளை நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசனும் வன்னிக்குச் செல்லலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.(த)


புனர்வாழ்வு அமைச்சினால் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் செயற்படுத்தப்படும் Vocational Training Center களிற்கும், யாழ்.மாவட்டத்தில் சங்கானை, ஊர்காவற்துறை, சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய இடங்களில் செயற்படும் Vocational Training Center களிற்குமான தலைமை நிறுவனமாக எமது நிறுவனமே செயற்படுவதுடன் அவற்றில் பயில்கின்ற மாணவர்களுக்கான பரீட்சைகள், மதிப்பீடுகள், சான்றிதழ் வழங்கல்கள் என்பவை எமது நிறுவனத்தாலேயே மேற்கொள்ளப்படுகின்றது என்பதனை பெருமையுடன் அறியத்தருகின்றோம்.

ITP JAFFNA SRI LANKA

# INFORMATION TECHNOLOGY PARK

Under the Purview of

**Ministry of Rehabilitation , Resettlement & Refugees**
**272, Stanley Road, Jaffna, Sri Lanka.**

Telephone: 021-2223641 E-mail: itp@sltnet.lk.

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் 2003 ஆம் ஆண்டின் 2ஆம் பருவத்திற்குரிய கணனிக் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் 20-05-2003 தொடக்கம் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## Certificate Courses

MS-Word, MS-Excel, MS-Access, AutoCAD, PageMaker, CoredDRAW.

Duration - 3Months | Course Fee-1000/-

Webpage & Graphics Design, C/C++, Visual Basic, Java, Oracle, Internet & E-mail, Hardware, HTML&Java Script.

Duration - 4 Months | Course Fee-1800/-

## Diploma Courses

| Course Title | Duration | Fee |
|---|---|---|
| Dip. in MS-Office | 5 | 2800/- |
| Dip. in DTP | 5 | 2400/- |
| Dip. in Hardware Technology | 6 | 3200/- |
| Dip. in Information Technology | 4 | 4750/- |
| Dip. in Computer Programming | 6 | 5500/- |

விண்ணப்பம்/ பதிவுகளிற்கான முடிவுத் திகதி- 20-06-2003
வார இறுதி வகுப்புக்கள் ஆரம்பம் - 15-06-2003
வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் - 16-06-2003

எமது நிறுவனத்தில் Diploma in Ms-Office, Diploma in Hardware Technology ஆகிய பயிற்சிநெறிகளைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கு DIT (Diploma in Information Technology) இல் பாடவிலக்கு(Exemption)வழங்கப்படுகின்றது. எனவே மாணவர்கள் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பாடவிலக்கு விபரங்களைப் பெற்று பரீட்சைக்குத் தோற்றுவதன் மூலம் **Diploma in IT** சான்றிதழைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

## Workshop Classes

| Courses | Duration | Fee |
|---|---|---|
| Hardware | 20 hours | 1000/- |
| Internet & E-mail | 20 hours | 1000/- |
| Computer Typesetting | 20 hours | 1000/- |
| Computer awarness for beginners (கணனி பற்றிய அடிப்படை அறிவையும்பெற) | 20 hours | 250/- |

பயிற்சிப்பட்டறைகள் யாவும் 01-06-2003 இல் இருந்து ஆரம்பமாகும். அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

## On line Classes

| Course | Duration | Fee |
|---|---|---|
| Diploma in PC Application & Office Management (Specialy for Workers) | 3Months | 2750/- |

Week day Morning and Evening classes only.
**Start on- 16-06-2003**

சகல கற்கை நெறிகளுக்குமான பதிவுக் கட்டணம் ரூபா 250/- மட்டுமே.

## INTERNET CAFE

யாழ்.மாவட்டத்திலேயே அதிகரித்த வேகத்துடன் மெருகூட்டப்பட்டு இணையசேவையானது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. புதிய அங்கத்தவர்கள் 01-06-2003 இல் இணைந்துக் கொள்ளப்படுவர். ஏற்கனவே அங்கத்தவராகத் தம்மை இணைத்துக்கொண்டவர்கள் தமது பதிவுகளைப் புதுப்பித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

*Centre for Information Technology*

For further Details: *Course Manager* Information: *Director*


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.05.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.